Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 10 ஞாயிற்றுக்கிழமை (27.10.2013) பக்கங்கள் 20 ஓசை - 027

# இந்தியாவின் பிடியிலிருந்து இலங்கை விலகும் அபாயம்

## THE HINDU தமிழக தீர்மானம் குறித்து இந்து எச்சரிக்கை

(சென்னை)

இலங்கையில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக்கூடாதென த் தெரிவித்து தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் இலங்கை, இந்தியாவின் பிடியிலிருந்து விலகிச்செல்லும் அபாயம் காணப்படுவதாக இந்து பத்திரிகை எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக இந்து பத்திரிகை நேற்றைய தினம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை தொடர்பான வெளிநாட்டுக் கொள்கையை மாற்றி அமைக்கக்கூடிய சிறந்தவாய்ப்பு ஒன்றை தமிழக அரசாங்கம் தவறவிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை தமிழக சட்டசபையில் வைத்து, கொழும்பு மாநாட்டில் இந்திய கலந்து கொள்வதை முற்றாக தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இந்த நிலையில் பாரிய அழுத்தங்களின் மத்தியில் இந்தியா, இந்த மாநாட்டை புறக்கணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்திய அரசாங்கம் வழங்கிய அழுத்தங்களின் அடிப்படையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்தி இருந்தார். இதன் விளைவாகவே வடக்கில் தமிழ் கட்சி ஒன்றினால் ஆட்சியைப் பிடிக்க முடிந்தது.

இந்த நிலையில் தற்போது இந்தியா இந்த மாநாட்டை புறக்கணிக்குமாக இருந்தால் இலங்கை இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்து விலகிச் செல்லும் அபாயம் காணப்படுகிறது.

எனவே இலங்கை தொடர்பில் இந்தியாவினால் இறுக்கமான கொள்கை ஒன்றை பின்பற்ற முடியாமல் போய்விடும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடேல் பாலசிங்கம், இம்மானுவேல் குறித்து பிரிட்டன் பிரதமர் கமரூனிடம் கேள்வியெழுப்பவுள்ளது அரசு

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் போது அடேல் பாலசிங்கம் மற்றும் போதகர் இம்மானுவேல் ஆகியோருக்கு புகலிடம் வழங்கியுள்ளமை சம்பந்தமாக பிரித்தானியாவிடம் கேள்வி எழுப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அடேல் பாலசிங்கம் பல போர்க் குற்றங்களுடன் சம்பந்தப் பட்டவர் என்றும் போதகர் இம்மானுவேல் நீர்வேலி வங்கிக் கொள்ளையுடன் சம்பந்தப்பட்டவர் என்றும் கூறியே அரசாங்கம் இந்தக் கேள்வியை எழுப்ப உள்ளதாக கூறப்படுகிறது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்க பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் தீர்மானித்துள்ளதாக அதற்கு பதிலளிக்கும் வகையில் அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறுவர் படையணிக்கு பயிற்சிகளை வழங்கியமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அடேல் பாலசிங்கம் லண்டன் நகரில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் அவர் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர் எனவும் பிரித்தானிய நாடாளுமன்றத்தின் சர்வக் கட்சி

(19) பக்கம் பார்க்க...

## மின்சாரம் தாக்கி முதியவர் உயிரிழப்பு

(கரணவாய்)

வதிரி இரும்பு மதவடிப் பகுதியில் உள்ள கராஜ் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த முதியவர் ஒருவர் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேபகுதியைச் சேர்ந்த இராமலிங்கம் சுப்பிரமணியம் (வயது-66) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் மின்பொருத்தி வேலை செய்து கொண்டிருந்த போதே இவ்அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. எனினும் உடனடியாக இவரை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் மரணமடைந்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. *(18)*

## வயற் கிணற்றிலிருந்து இளம் பெண்ணின் சடலம் மீட்பு

சுழிபுரம் பெரியலோ பகுதியில் வயல்கிணற்றில் இருந்து இளம் பெண் ஒருவரது சடலம் வட்டுக் கோட்டைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த கதிரன் யோகேஸ்வரி (வயது - 36) என்ற இளம் பெண்ணின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4.00 மணியளவில் மீட்கப்பட்ட இந்த சடலம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையை அடுத்த சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, மன நோயினால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த பெண்ணை சம்பவ தினம் அன்று அதிகாலை வீட்டில் இல்லாது உறவினர்கள் தேடிய போது குறித்த வயற் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இவரது சடலம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பா)

08



குறைப்பு

## பொதுநலவாய மாநாட்டில் கூட்டமைப்பு பங்கேற்காது

இலங்கையில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.

வடமாகாண சபையின் முதலாவது அமர்வு கைதடியில் நேற்று முன்தினம் நடைபெற்றதையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம்

(19) பக்கம் பார்க்க...

11



ராஜா

18



கல்விக்கு

## பிக்குகள் முன்னணியிடம் ரணிலின் யோசனைகள்

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவும் நெருக்கடிக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதன் மூலம் தீர்வு காணும் வகையில் 19 யோசனைகளை அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஐக்கிய பிக்குகள் முன்னணிக்கு அனுப்பியுள்ளார்.

இந்த யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு ரணில் விக்ரமசிங்க, கருஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையில் தீர்க்கமான பேச்சுவார்த்தை ஒன்று அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

ரணில் விக்ரமசிங்க அனுப்பிய இந்த யோசனைகள் தொடர்பில் ஐக்கிய பிக்குகள் முன்னணிக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீமுக்கும் இடையில் இந்த வாரத்தில் சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இதன்படி அனைத்து பேச்சு வார்த்தைகளையும் இந்த மாதத்திற்குள் நிறைவு செய்து கட்சியை வழிநடத்த தலைமைத்துவ சபை ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ௯௦௦ தமிழ்பேசும் பொலிஸார் வடக்கில் கடமையில்


இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சுமார் 2800இற்கும் அதிகமான தமிழ் மொழியைப் பேசக் கூடிய அதிகாரிகள் கடமையாற்றுவதாகவும், இவர்களில் 900 பேர் வடக்கில் கடமையாற்றுவதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தின் பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி பேசும் அதிகாரிகளை நியமிப்பது தொடர்பில் வட மாகாண முதலமைச்சர் தெரிவித்த கருத்துக்கு பதில் அளிக்கும் வகையில், நேற்றைய தினம் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் பொலிஸ் நிலையங்களுக்கு வருபவர்களுக்கு அவர்களின் தாய் மொழியில் விசேடமாக தமிழில் சேவைகளை

(19) பக்கம் பார்க்க...

## பாகிஸ்தான் கடற்படைக் கப்பல்கள் இன்று கொழும்பு வருகின்றன



(கொழும்பு)

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு நான்கு நாள் பயணமாக பாகிஸ்தான் கடற்படையின் இரண்டு கப்பல்கள் இன்றைய தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் நேற்று

(19) பக்கம் பார்க்க...

# அதிபரின் வீட்டில் நகைகள் கொள்ளை

## மல்லாவியில் சம்பவம்

மல்லாவி யோகபுரம் அ.த.க. பாடசாலை அதிபரின் வீட்டில் நேற்று முன்தினம் காலை 21 பவுண் நகைகள் கொள்ளை யடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை 7.45 மணியளவில் அதிபர் பாடசாலைக்கு சென்ற நிலையில் வீட்டில் ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து வீட்டின் கூரையை பிரித்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 21 பவுண் தங்க நகைகளை திருடிக் கொண்டு தப்பியோடியுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இதுதொடர்பாக அதிபர் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (140)

# மாணவரை மேன்மையடையச் செய்வது ஆசிரியர்களின் உயரிய கடமையாகும்

## யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்

(திருநெல்வேலி)

ஆசிரியர்கள் சமூகத்தின் வழிகாட்டிகள் சமூகம் ஆசிரியர்களை நம்பிப் பிள்ளைகளை அவர்களிடம் ஒப்படைத்துள்ளது. அவர்களை மேன்மை அடையச் செய்ய வேண்டியது மதிப்பும் மரியாதைக்கும் உரிய ஆசிரியர்களின் கடமை என யாழ்வலய பிரதிக் கல்விப பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன் தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வீரமணி ஐயர் கலை அரங்கு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியன் பத்திரிகை வெளியீட்டின் போது நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரைநிகழ்த்திய அவர் கல்வியில் உயர்நிலையைத் தொட்டவர்கள் நாங்கள் இவ்வளவு உயர்வாக இருந்து எமது கல்வி இன்று பின்னடைவை நோக்கிச் சென்றதற்குரிய காரணங்களை கண்டறிய வேண்டும்.

கல்வித்துறை சார்ந்த ஒருவர் கல்வியமைச்சராக நியமிக்கப்பட்டமை மகிழ்ச்சிக்குரியது அறிவார்ந்த சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு நாம் எல்லோரும் ஒன்றாக இணைதல் வேண்டும் இருபத்தொன்பதாயிரம் அங்கத்தவர்களை கொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியன் பத்திரிகை பல ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

எமது மாணவ்ர்கள் நல்லவர்களாக சான்றோர்களாக புதியதோர் உலகம் ஒன்றை உருவாக்குதல் வேண்டும். மாணவர்களின் அடைவுமட்டம் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம். ஒழுக்கமுள்ள நல்ல விழுமியங்களோடு கூடிய மாணவர் சமுதாயம் ஒன்று உருவாக வேண்டியதற்கு அவசியம் உணரப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் வாண்மையுள்ளவர்கள் நிறைந்த ஆற்றல் படைத்தவர்கள், அவர்கள் மாணவர்களை இனம் கண்டு ஒழுக்கமும், பயிற்சியும் பண்பும், கல்வியும் நிறைந்த உயர் சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் எனக்கூறினார். (137)

# சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் முதியோர் இல்லத்திற்கு விஜயம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கடந்த 23 ஆம் திகதி புதன் கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு வருகை தந்தது இலண்டனில் இருந்து வந்திருந்த தம்பதிகளும், சின்ன மாமி புகழ் நித்திகனகரத்தினமும் இவர்களுடன் இணைந் திருந் தனர்.

இவ் இல்லத்தில் தங்கிவாழும் முதியோர்களுக்கு லண்டன் தம்பதிகளினால் ஆடை நீக்கிய அங்கர் பால்மா வழங் கப்பட்டது. பாடகர் நித்திகனகரத்தினம் பாடிய "கள்ளுக்கடைப் பக்கம் போகாதே", "சின்ன மாமியே உன் சின்னமகள் எங்கே" போன்ற பாடல்கள் முதியவர்களை வெகுவாக கவர்ந்தது.

தொலைக்காட்சிப் பாடகி காலித்தியா தனது இனிய குரலினால் பாடிய பல பாடல்கள் பலரையும் கவர்ந்தது. கைதடி நவில்ட் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டு பல பாடல்களைப் பாடிப பாராட்டுக் களை பெற்றுக் கொண்டனர் (137)

# உயர்தர மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பரீட்சை

2014 ஆம் ஆண்டின் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான தகவல் தொழிநுட்ப பரீட்சைகள் இன்று நடத்தப்படவுள்ளன.

நயினாதீவு, காரைநகர், வேலணை உள்ளிட்ட நாடுபூராகவும் உள்ள 1,114 பரீட்சை மத்திய நிலையங்களில், இன்று காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை பரீட்சைகள் நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இந்தப் பரீட்சையில் 24,888 தமிழ் மொழி மூல பரீட்சார்த் திகளும், 101,449 சிங்கள மொழி மூல பரீட்சார்த்திகளும், 11,505 ஆங்கில மொழிமூல பரீட்சார்த் திகளும் தோற்றவுள்ளனர்.

இதன்படி மொத்தமாக 137,842 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் பரீட்சைகள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படின் 0112 784 208 மற்றும் 0112 784 537 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்க முடியும்.

# கூட்டுறவுச் சங்க கிளையை வழமை போல் திறக்க கோரிக்கை

(கரணவாய்)

கப்பூது கிராமம் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி காணப் படுகிறது. குறிப்பாக இந்த ஊர் மக்கள் தமது அத்தி யாவசிய தேவையான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கூட கடைகள் இல்லாத நிலையில் காணப்படுகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் தமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு 5 மைல் தொலைவில் உள்ள நெல்லியடி அல்லது கரணவாய்க்குச் செல்ல வேண்டிய கட்டாயம் நேரிட்டுள்ளது.

இங்கு இயங்கி வந்த உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்று வழமை போல் அல்லாது பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையே தற போது திறந்திருக்கிறது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தக் கூட்டுறவுச் சங்கக் கிளை வழமை போல் காலை தொடக்கம் மாலை வரை திறப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கப்பூது கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(18)

# நவீன கடைத்தொகுதி பணிகள் ஆரம்பம்

பளை நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள மத்திய பேருந்து நிலைய கட்டடத்துக்கு மேலே நவீன கட்டடத் தொகுதிகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

5 மில்லியன் ரூபா செலவில் மாகாண நன்கொடை நிதி மூலம் கடைத்தொகுதி அமைக்கும் பணி நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (12[illegible])


# நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 199 | திகதி 2013.10.25 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

02 46 62 64 G (ஆங்கில எழுத்து)

பரிசுத் தொகை ரூபா. 10,383,280/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 06 | 300,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 203 | 203,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 399 | 399,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9296 | 557,760/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4972 | 198,880/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 121989 | 2,439,780/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17552 | 351,040/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 10,383,280/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,449,460/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்கொகை ரூபா. 10,622,200/-

2013.10.29ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

C/3104

web : www.dlb.lk


# பாலம் புனரமைக்க கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்திற்கு உட்பட்ட சூடுவெந்தான் கிராமத்துக்கான பிரதான வீதியிலுள்ள பாலம் கடந்த ஐந்து மாதகாலமாக உடைந்த நிலையில் காணப்படுகிற்து. தனால் இந்த வீதியினை பயன்படுத்துவோர் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

நெடுங்கேணி பிரதான வீதிக்கு கனரக வாகனத்தில் மண் கொண்டு வந்த போதே இந்தப் பாலம் உடைந்ததாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கிராமசேவையாளரிடம் முறையிட்டும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை பாலம் எந்நேரமும் முழுமையாக உடையும் நிலையில் காணப்படுகிறது. தற்போது பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ள நிலையில் இந்தப் பாலத்தினை சீர்செய்ய உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(40)

# பரிசளிப்பு விழா

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளது. பாடசாலையின் பிரதான மண்பத்தில் பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.லோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோகேஸ்வரி ரவிந்திரனும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை சனச வங்கி முகாமையாளர் அற்புத கிருஷ்ணனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (109

# முன்னோடிப் பரீட்சை

தரம் 11 இற்குரிய மாகாணமட்ட முன்னோடிப்பரீட்சை நவம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை நடைபெறுவதுடன் தரம் 9 இற்குரிய மாகாண மட்டப் பொதுப் பரீட்சை நவம்பர் 20 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (66)

# பொதுக்கூட்டம்

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கழகத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கழகத்தில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்க வேண்டியுள்ளதால் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

# இந்து ஆலயங்களில் திருட்டு நடவடிக்கை எடுக்கப்படுமா?

(திருநெல்வேலி)

இந்துக் கோயில்களில் திருட்டுக்கள் இடம்பெறுவது தொடர்கதையாக இருப்பதினால் இந்து சமூகம் மிகவும் கவலை கெண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான தங்க நகைகள், வெள்ளி அங்கிகள், விக்கிரகங்கள், பூஜைக்குரிய உபகரணங்கள், சுவாமி காவும் வாகனங்கள் எனப் பலதரப்பட்ட பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. நீண்டு கொண்டு செல்லும் இத் திருட்டுக்கள் பற்றி கோவில் நிர்வாகங்களும் கவலையடைந்துள்ளன.

மதிப்பும், ·மரியாதையும், நம்பிக்கையும் வைத்துத் தாங்கள் வழிபாடு செய்யும் தெய்வ விக்கிரகங்களைக் களவாடிச் செல்வோர் மனிதாபிமானமும், மத நம்பிக்கையும் மிக்கவர்களா என இந்துப் பெரியவர்களினால் கேட்கப்படுகின்றது.

கோயில்களில் இத்தகைய திருட்டுக்களில் ஈடுபடுவோர் இதுவரை அகப்பட்டுக் கொள்ளாதது, அவர்கள் தொடர்ந்தும் துணிச்சலுடன் மேலும் திருட்டுக்களில் ஈடுபடுவதற்குத் தூண்டுதலாக உள்ள காரணியாக அமைகிறது.

ஆலயத் திருடர்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பது பலரது விருப்பமாகும். (137)

# சத்தியசாயி நிறுவனத்தால் மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்.நிருபர்)

வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு அன்பு வாரத்தை முன்னிட்டு வடபகுதிப் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கட்டுரைப்போட்டிகள் தரம் 5, 6, 7 மாணவர்கள் பிரிவு I இலும் 8, 9, 10 ஆம் தர மாணவர்கள் பிரிவு II இலும் 11, 12, 13 ஆம் தர மாணவர்கள் பிரிவு III இலும் பங்குபற்ற முடியும்.

கவிதை மற்றும் சித்திரப் போட்டிகள் III ஆம் பிரிவுக்கு மாத்திரம் நடைபெறும். கவிதைத் தலைப்பு - அன்பு.

சிததிரம் - அன்பை வெளிபபடுத்துவதாக அமைதல் வேண்டும்.

"அன்பு" என்ற தொனிப் பொருளில் மாணவர்களால் ஆக்கப்பட்ட ஆக்கங்களை அதிபர் உறுதிப்படுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வி இணைப்பாளர், "சாயிதர்சன்", கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டுமென மேற்படி இணைப்பாளர் கே.வி.சிவனேசன் தெரிவித்துள்ளார். (10)

# ஆயுள்வேத வைத்தியசாலை மருத்துவசேவைகள் ஆரம்பம்

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேசசபை தலைமைக் கட்டடத்திற்கு அருகில் சித்த ஆயுள்வேத வைத்தியசாலை இயங்குகின்றது. யாழ். மாவட்டத்தில் நான்காவது வைத்தியசாலையாக கொடிகாமம் ஆயுள்வேத வைததியசாலை விளங்குகின்றது.

இவ் வைத்தியசாலையானது மாகாண சுதேச மருத்துவ துறையின் கீழ் இயங்குகின்றது. அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்திப் பிரிவில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மருந்துகளே இங்கு பெருமளவு பயன் படுத்தப்படுகின்றன.

இவ்வைத்தியசாலைக்கு 50 இற்கு மேற்பட்டவர்கள் தினமும் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும், சரசாலையில் உள்ள பிரதேசசபை உப அலுவலகத்தில் திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் நடமாடும் சேவை இடம்பெறுகின்றதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வைத்தியசாலைக்கு தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து பெருமளவான நோயாளிகள் வைத்தியசாலைக்கு வந்து செல்வதைக் காணமுடிகின்றது. (130)

# சரசாலை பொதுநூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரிப் பிரதேச சபையின் கீழுள்ள சரசாலை பொதுநூலகத்தினரால் மாணவர்களிடையே நடத்தப்படட போட்டி முடிவுகள் நூலகர் இ.தர்மலிங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

சிறுவர்களுக்கான கதை கூறல்

சூ.பேமிளா (வீரசிங்கம் மத்திய கல்லூரி), அ.மதுரா (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி), அ.அபர்ணா (மட்டுவில் கமலாசினி வித்தி).

பேச்சுப்போட்டி

பிரிவு II

சி.கம்சனா (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி), மு.அகனிகா, ம.டினோசன் (யாழ். வீரசிங்கம் மத்திய கல்லூரி).

பிரிவு III

தே.தீபிகா, க.லாவண்யா, ப.பவனையா (வீரசிங்கம் மத்திய கல்லூரி).

கட்டுரை

பிரிவு IV

க.பாசுபதன், தே.வித்தியா (வீரசிங்கம் மத்திய கல்லூரி), தி.கஸ்தூரி (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா கல்லூரி). (11)



மானிப்பாய் பரிஷ் லியோக் கழகமும் வலி தென் மேற்கு பிரதேச சபையும் நீர்கொழும்பு ஒறியன்ற் லியோக் கழகமும் இணைந்து பனை மரக் கன்றுகளை அண்மையில் கல்லுண்டாய் வெளிப்பகுதியில் நாட்டினர். (48)

# ஜனநாயக மறுப்பு என்னும் போதை!




தமிழர்களுக்கும் ஜனநாயகத் துக்கும் வெகு தூரம். சில பழக்கங்கள் சிலருக்குச் சுட்டுப்போட்டாலும் வருவதில்லை. அதைப்போல ஜனநாயகம் என்ற விசயம் தமிழ்ப்பெருங்குடி மக்களுக்கு வரவே வராது. அவர்களுக்கு அது புரியவும் மாட்டுது.

இன்று தமிழர்கள் உலகெங்கும் சிதறிப் பரந்து வாழ்கிறார்கள்.

இப்படி அவர்கள் சிதறி வாழவேண்டியேற்பட்டதே ஜனநாயக மின்மையால்தான்.

ஒன்று கொழும்பு அரசியற் தலைமையின் ஜனநாயக விரோதப் போக்கினால் ஏற்பட்டது. மற்றது, தமிழ்ச் சூழலில் நிலவும் ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகளின் விளைவினால்.

ஆகவே உலகத்திசையெங்கும் அகதிகளாகச் சிதறிப் பல்கிப் பெருகியுள்ள தமிழ்க்குடிக்கு இன்று ஜனநாயகத்தின் அருமை பெருமையெல்லாம் தெரிந்திருக்க வேணும்.

உள்நாட்டில் நிலவிய ஜனநாயக மறுப்பின் தீமையைப் பற்றியும் தற்பொழுது தாம் வாழுகின்ற நாடுகளில் நிலவுகின்ற ஜனநாயக உரிமைகளின் நன்மை பற்றியும் புலம்பெயர்ந்திருக்கிறவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனாலும் அவர்களிற் பலர் நடைமுறையில் ஜனநாயக விரோதிகளாக அல்லது ஜனநாயக மறுப்பாளர்களாகவே உள்ளனர்.

இதற்கு நல்ல உதாரணம், அவர்களால் நடத்தப்படுகின்ற இணையத்தளங்களும் ஊடகங்களும்.

மேலும் உதாரணம் வேண்டுமென்றால் அவர்களுடைய முகப்புத்தகங்கள்.

இன்னும் சொல்லவேண்டுமானால், அவர்கள் புலம்பெயர் நாடுகளில் நடத்துகின்ற நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்கள்.

ஆனால், இவர்களுக்கே ஜனநாயகத்தின் மாண்பு புரிந்திருக்க வேணும். அதன் லாப நட்டங்களை மதிப்பிடக்கூடிய வாய்ப்பு இவர்களுக்கே உண்டு.

மட்டுமல்ல, அங்குள்ள ஜனநாயகச் சூழலின் வளங்களையும் வாய்ப்புகளையும் இவர்கள் தாராளமாக அனுபவிக்கின்றனர்.

இவ்வளவும் இருந்தும் இவர்கள் ஜனநாயகத்தை மறுப்பதுதான் புரிந்துகொள்ளக் கடினமானது.

இவர்களின் நிலையே இப்படியென்றால், ஆண்டபரம்பரைக் கனவோடும், சாதி, மத, பிரதேச வெறியோடு வாழுகின்ற உள்ளூர்த்தமிழ்க்குடியின் நிலையைப் பற்றிச் சொல்ல வேணுமா?

தமது கருத்துக்கு மாற்றுக் கருத்து இருக்கக் கூடாது.

தமது அணிக்கு மாற்றாக இன்னொரு அணி செயற்பட முடியாது.

தாம் சொல்வதற்கு மறு அபிப்பிராயம் கிடையாது.

இந்த மாதிரித்தான் தமிழ்ப்பெருங்குடி வாழ்கிறது, வாழ விரும்புகிறது, வாழமுற்படுகிறது.

ஏகப்பிரதிநிதித்துவம், ஏகத்தலைமை போன்றனவெல்லாம் இந்த வகையினவே.

முன்னர் தமிழரசுக் கட்சி இப்படித்தான் செயற்பட்டது. பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணி. பின்னர் புலிகள். தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய முன்னணி உள்ளிட்ட தமிழ்த் தேசிய (முகமூடி) சக்திகள்.

இவைகளின் அணுகுமுறையும் அரசியலும் ஜனநாயக மறுப்பில் தான் வேர் விட்டுள்ளது.

தமிழ்த்தேசியத்தின் பெருங்குறைபாடே அது உள்ளும் புறமும் விரிய மறுப்பதனால் ஏற்படுவதே என தமிழ்த்தேசிய அபிமானிகளிற் பலரும் விமர்சகர்களும் குறிப்பிடுகிறார்கள்.

ஆனால், அது ஒரு போதும் விரியாத – விரியக் கூடிய இயல்பற்ற மூடுண்ட அமைப்பாகவே இருக்கிறது.

இதற்கு அண்மைய நல்ல உதாரணம், வட மாகாணசபைக்கான புதிய கட்டிடத்தொகுதியின் திறப்பு விழா தொடர்பாக ஏற்பட்ட பிணக்கும் பிரச்சினையும் சர்ச்சையும்.

இந்தக் கட்டிடத்தின் திறப்பு விழாவுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அழைப்பதாக ஒரு தரப்பினர் தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் தனது மறுப்பைத் தெரிவித்திருக்கிறது. குறிப்பாக முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சொன்னாராம், அமைச்சர் டக்ளஸ் வருவதாக இருந்தால் அந்த நிகழ்வில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என.

இந்தமாதிரி முடியாட்சிச் சிந்தனை கொண்டவர்கள் இவர்கள் என்பதால்தான் சம்பந்தனுக்கும் விக்கினேஸ்வரனுக்கும் தமிழ்ப் பெருமக்கள் மன்னர்களுக்குரிய கிரீடத்தை சூட்டினார்கள்.

தமது விருப்பத்தைத் தவிர, வேறு எதற்கும் இடமில்லை என்பது ஒரு போதை.

இந்தப் போதையால்தான் இலங்கைத்தீவு இரத்தம் சிந்தியது.

இலங்கையின் இருண்டகாலத்தை உருவாக்கியதும் இந்தப்போதையே.

இதுதான் பிறரிடம் நம்மை மண்டியிட வைப்பதும்.

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஒரு முனையில் நெருப்பு!

உலகில் மனித இறப்புகளை தோற்றுவிக்கும் முக்கிய காரணிகளில் புகைப்பழக்கம் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. புகையிலையால் அதிகம் பாதிக்கப்படுவது நுரையீரல், கண்பார்வை போன்றவைதான்.

புகைப்பழக்கம் காரணமாக நரம்புத்தளர்ச்சியின் பிடியில் சிக்கி ஆண்மையை இழந்து தவிப்போர் அதிகரித்து விட்டனர் என்றும் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

புகைப்பிடிப்பதால் உடலுக்கு விளையும் ஊறுகளையும், நோய்களையும் விரிவாகவும் விளக்கமாகவும் மருத்துவ வல்லுனர்கள் எடுத்துச் சொல்லியும் எழுதியும் வருகிறார்கள். புகைப்பிடிப்பவர்கள் மாத்திரமின்றி அவர்களைச் சூழ்ந்திருப்பவர்களும் கூட அப்புகையை சுவாசிக்க நேரிடுவதால் பல்வேறு உடல் கோளாறுகளுக்கும், வியாதிகளுக்கும் ஆளாகிறார்கள்.

சுயமாக புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாதவர்களுக்கும், புகைப்பிடிப்பவர்களின் அருகில் இருந்தமையால் அவர்கள் விடும் புகையை உட்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி, அதன் காரணமாக அவர்களுக்கும் நோய் ஏற்படுவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உண்மையில் அவர்கள் புகைப்பிடிக்காவிட்டாலும் அருகில் இருந்து சுவாசிப்பதால் அவர்களை செயல் அற்ற புகைப்பிடிப்பவர்கள் (Passive Smokers) என்று மருத்துவ ரீதியாக வகைப்படுத்தியுள்ளனர். இவ்விதம் பயங்கர கேடுகளை விளைவிக்கும் ஒரு 'சமூக விரோதி' இந்த புகைப்பிடித்தல் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

சிகரெட்டில் எட்டாயிரம் இரசாயனத் துகள்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவற்றில் சில மில்லிகிராம்கள் தான் நம் உடம்பில் தங்குகின்றன. இந்த சிறிய அளவே உடலை, மனதை பெரிதளவு பாதித்து விடுகிறது. புகைப்பழக்கத்தைக் கொண்டவர்கள் மீண்டும் மீண்டும் அதிலிருந்து விலக முடியாமைக்கு இவை பெரிய காரணிகளாக இருக்கின்றன.

உடல் எடை கூடுவது, நள்ளிரவில் வியர்ப்பது, பாறாங்கல்லைக் காலில் கட்டிவிட்டதுபோல் நடக்கச் சிரமப்படுவது, கைகள் நடுங்குவதெல்லாம் புகையை நிறுத்திய சில வாரங்களுக்குப் பிறகு நடக்கும் மாற்றங்கள். புகையில் இருக்கும் நிக்கோடின் அந்தளவுக்கு மூளையையும் பாதிக்கும்.

புகை உடல் நலத்துக்குப் பகை என்பது நமக்கு நன்கு தெரியும். ஆனாலும் புண்பட்ட மனத்தைப் புகைவிட்டு ஆற்றுவதாகக் கூறிக்கொண்டோ, 'ஸ்டைலுக்காக' ஆரம்பித்துப் பிறகு விடமுடியாமல் தடுமாறிக்கொண்டோ புகைப்பழக்கத்தால் அவரவர் இதயத்தைப் பாழ்படுத்தி வருபவர்கள் அநேகம்.

புகைப்பிடித்தல், உடலில் உள்ள பலவகையான உறுப்புகளுக்குக் கேடு விளைவிப்பதோடு இதயத்தையும், இதயம் தொடர்புடைய இரத்தக் குழாய்களையும் கடுமையாகச் சிதைத்து விடுகின்றது.

சிகரெட்டைப் புகைக்கும்போது இரண்டு மில்லிகிராம் அளவுள்ள நிக்கோடின் உடலுக்குள் செல்கிறது. இது இரத்த அழுத்தத்தை மிகைப்படுத்துவதோடு, இதயத் துடிப்பின் அளவையும் அதிகமாக்குகிறது. இதயம் பலவீனமாகிறது. 2 முதல் 4 சதவீத அளவில் உள்ள காபன் மோனொக்ஸைட் வாயுவும் மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்தது.

எனவே இதயத்தின் நலனைக் காக்க வேண்டும் என்றால் புகையையும், மதுவையும் கண்டிப்பாகத் தவிர்த்துவிடுவதே நல்லது. இந்த சந்தோஷங்களையும் கைவிட்டு இதயத்தைக் காப்பற்றத்தான் வேண்டுமா என்று கேட்பவர்களை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள்தானே அதிகமாக இருக்கிறார்கள்! 'குடிப்பதும் புகைப்பதும் உடல்நலத்திற்குக் கேடு' என்று போத்தலிலும் பெட்டியிலும் போட்டு, விட்டுவிட வேண்டியதுதான்!

- ஆசிரியர்

# இனவாரியான பொலிஸ் படை அமைப்பது சாத்தியமில்லை

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒவ்வொரு இனங்களின் தேவைக்கு ஏற்ற மாதிரி இலங்கையில் பொலிஸாரை நியமிக்க முடியாது என பொலிஸ்மா அதிபர் என்.கே. இளங்கோன் தெரிவித்தார்.

இந்த நாட்டின் சகல மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு பொலிஸ் துறையின் கீழ் அனைத்து பொலிஸாரும் செயற்படுவதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

வடக்கிற்கான பொலிஸ் அதிகாரம் குறித்து, வடமாகாண சபையின் முதல் அமர்வு கைதடியில் உள்ள மாகாண சபைக் கட்டடத்தில் நடைபெற்ற போது வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் அவசியமான தமிழ்ப் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு பொலிஸ் நிலையத்தில் மூன்று, நான்கு தமிழ்ப் பொலிஸார் சேவையில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

விக்னேஸ்வரன் அவ்வாறு குறிப்பிடுவதற்கு முன்னதாகவே மொழிப் பிரச்சினை தொடர்பில் அறிந்து கொண்டு பொலிஸில் தமிழ் தெரிந்தவர்களை அதிகமாக இணைத்துக் கொண்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இதன்படி பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக 2 ஆயிரம் வரையான தமிழ் தெரிந்த பொலிஸார் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

# சுகாதாரத் தொழிலாளர் நியமனம் நேர்முகப் பரீட்சைக்கு முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் சுகாதாரத் தொழிலாளர் இடங்களை நிரப்புவதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற நேர்முகத் தேர்வில் சுமார் 700 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில தொண்டர்களாகப் புணியாற்றி வருபவர்களும் மேலும் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்தவர்களுமாக 700இற்கு மேற்பட்டவர்கள் இந்நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றினர்.

யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இந்நேர்முகப் பரீட்சையை நடாத்தியுள்ளனர். நேற்றுக் காலையில் இருந்து பிற்பகல் வரை இவ்வாறு நேர்முகத்தேர்விற்கு வந்திருந்தவர்களால் யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகப்பகுதி நிரம்பிக் காணப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு வந்திருந்தவர்களுக்கு விண்ணப்பப்படிவம் ஒன்று வழங்கப்பட்டு அவர்களினால் அது பூரணப்படுத்தப்பட்ட பின்னர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்போதனா வைத்தியசாலையில் நிலவும் 350 சுகாதாரத் தொழிலாளர் வெற்றிடங்களை நிரப்பும் முகமாகவே இந் நேர்முகப்பரீட்சை நடைபெற்றது. தேவையான தகைமை உள்ளவர் களுக்கு நியமனம் வழங்கப்படவிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# துரத்துகிறது எயிட்ஸ் 169 பேர் பாதிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 169 எயிட்ஸ் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக பாலியல் தொடர்பான நோய்களுக்கான தேசிய ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் எயிட்ஸ் தொற்று காரணமாக 25 பேர் உயிரிழந்துள்ளதாக அந்தப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

எயிட்ஸ் வைரஸ் தொற்றுக்குள்ளான 300இற்கும் அதிகமானவர்கள் இதுவரை உயிரிழந்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் 482 பேர் எயிட்ஸ் வைரஸினால் பீடிக்கப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் 169 பேர் பதிவாகியுள்ளதாக பாலியல் தொடர்பான நோய்களுக்கான தேசிய ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேலும் கூறியுள்ளார்.

# பேருந்துகளில் விற்பனை; கட்டுப்படுத்த ஏற்பாடு

பேருந்துகளில் பலவந்தமாக விற்பனைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

நடமாடும் வியாபாரிகள் சிலர் பேருந்துகளில் வைத்து, பயணிகளிடம் பலவந்தமாகப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

# ஆஸி. அகதி முகாமில் பாலியல் தொல்லை; இலங்கையர்களுக்கும் பாதிப்பு?

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் உள்ள அகதி முகாம்களில் பாரியளவில் பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தகவல் அறியும் சுதந்திரத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற தகவல்களை மேற்கோள்காட்டி, த கார்டியன் பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பலவந்த பாலியல் வன்புணர்வுகள், மற்றும் பாலியல் இம்சைகள் குறித்த முறைப்பாடுகள் பல பதிவாகியுள்ளன.

2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல், 2011 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் இவ்வாறான 34 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எனினும் 2011 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், இது சம்பந்தமாக அவுஸ்ரேலிய குடிவரவுத்துறை அதிகாரிகள் எந்தப் பதிவுகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களில், இலங்கையைச் சேர்ந்த அகதிகளும் பாதிக்கப்பட்டார்களா? என்பது தொடர்பில் உறுதியான தகவல் எவையும் இது வரையில் வெளியாகவில்லை.

# மேன்முறையீட்டுக்கு கால எல்லை நீடிப்பு

2013 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேடு தொடர்பான மேன் முறையீடுகளுக்கு ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்வதற்குரிய கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேன் முறையீடுகளை தாக்கல் செய்வதற்காக செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் வாக்காளர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது எனப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு இம்மாதம் 30ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து முறையான விசாரணைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார்.

இந்தக் காலப்பகுதியினுள் 2013 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள பெயர்கள் தொடர்பான ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், அவை தொடர்பில் ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்காகவே நவம்பர் மாதம் 13 ஆம் திகதி வரையான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.



# கூட்டமைப்பிடமிருந்து வெற்றுப் பேச்சுக்களை மக்கள் எதிர்பார்க்கவில்லை

**முதலமைச்சரும் அவரைச் சுற்றியிருக்கும் சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்களும் அரசாங்கத்தின் பக்கம் சாய்கின்றார்கள் என்ற அபிப்பிராயம் சிறீதரனின் தலைமையை அங்கீகரிக்கும் கடும்போக்குப் பிரிவினரிடம் தோன்றியிருக்கின்றது. மாகாண முதலமைச்சரையும் கூட்டமைப்புத் தலைமையையும் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பு அரசியலுக்குள் இழுக்கும் முயற்சியாகவே மாவீரர் துயிலுமில்லங்களைத் துப்புரவு செய்து பேண வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருக்கின்றது.**

■ சங்கர சிவன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகக் கூடுதலான பெரும்பான்மை பலத்துடன் வடமாகாண சபையைக் கைப்பற்றியபோதிலும் நிம்மதியாக ஆட்சி செய்யக்கூடிய நிலை இல்லை. முதலமைச்சர் உட்பட ஒரு சாரார் நிதான அரசியல் பற்றிப் பேசுகின்றார்கள். இன்னொருசாரார் நிதான அரசியலைக் கவிழ்த்தே தீருவோம் என்று கங்கணம் கட்டி நிற்கின்றார்கள். மறுபுறத்தில் தமிழரசுக் கட்சிக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடு நாளுக்கு நாள் கூர்மையடைகின்றது.

மாகாண சபை செயற்படத் தொடங்குவதற்கு முன்னரே இப்படிக் குழப்பங்களா என்று கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்கள் ஆச்சரியப்படலாம். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எதிர்பார்த்ததுதான். குழப்பங்களின் மொத்த உருவமாகவே கூட்டமைப்பு ஜனநாயக அரசியலுக்கு வந்தது. அந்த நிலையிலேயே மாகாண சபைத் தேர்தலுக்கும் முகங்கொடுத்தது.

புலிகளின் செயலாணைக்குகட்டுப்பட்டுச் செயற்பட்ட காலத்தில் கூட்டமைப்புக் கட்சிகள் வெறும் 'ஆமாம் சாமி' கட்சிகளாகவே இருந்தன. புலிகளின் தோல்விக்குப் பின் ஜனநாயக அரசியல் அரங்குக்கு வந்த கூட்டமைப்பில் மூன்று விதமான போக்குகளை அவதானிக்க முடிந்தது. புலிகளின் தனிநாட்டு நிலைப்பாட்டை அப்படியே ஏற்றுக்கொண்ட போக்கு ஒன்று. எதிர்ப்பு அரசியல் மூலம் அரசாங்கத்துடனான முரண்பாட்டை வளர்ப்பது தனிநாட்டுக் கோரிக்கைக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் என்ற நம்பிக்கையுடன் இவர்கள் செயற்பட்டார்கள். தனிநாடு சாத்தியமற்றது என்ற நிலைப்பாட்டைக் கொண்டது மற்றைய போக்கு. இவர்கள் தங்கள் நிலைப்பாட்டைப் பகிரங்கமாக முன்வைப்பதற்கான துணிச்சல் இல்லாதவர்களாகவும், தனிநாட்டை ஆதரிக்கும் தீவிரவாத சக்திகளுக்கு அஞ்சியவர்களாகவும் இருந்தனர். பங்காளிக் கட்சிகள் தமிழரசுக் கட்சிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன்வைப்பது மூன்றாவது போக்கு. பங்காளிக் கட்சித் தலைவர்கள் கொள்கையிலும் பார்க்கத் தங்கள் அரசியல் இருப்புக்கே முக்கியத்துவம் அளித்தார்கள். இந்த நிலையில் மாகாண சபை மட்டத்தில் முரண்பாடுகள் தலைதூக்குவதொன்றும் புதுமையல்ல. மாகாண சபைத் தேர்தல் காலத்தில் தற்காலிகமாக அடங்கிக் கிடந்த முரண்பாடுகள் தேர்தல் முடிந்ததும் அரங்குக்கு வருகின்றன.

தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று உரிமை கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் தீட்டமொன்றை முன்வைத்து அதன் அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுக்க இயலவில்லை. தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான திறமை உள்ளவர்கள் கூட்டமைப்பில் இல்லை எனக் கூற முடியாது. இவர்களுக்கு அந்த அக்கறை இல்லை என்பதே உண்மையான காரணம். தீர்வுத் திட்டமொன்றை நடைமுறைச் சாத்தியமானதாகத் தயாரிக்க வேண்டுமானால் உட்கட்சிச் 'சத்திர சிகிச்சை' அவசியம். நடைமுறைக்குப் பொருந்தாததும் அழிவுகரமானதுமான தனிநாட்டு இலக்கைக் கொண்டவர்களை வெளியிலே போட நேரிடும். அப்படிச் செய்தால் தேர்தலுக்காகக் காட்சிப்படுத்தும் ஒற்றுமை என்ற போலித் திரைகிழிந்து வாக்கு வங்கி உடைந்து விடுமே என்ற பயம். அதேநேரம் புலி சார்ப்புப் புலம்பெயர் அமைப்புகள் அள்ளிக் கொடுக்கும் நிதியையும் இழக்க விரும்பவில்லை. சுருக்கமாகக் கூறுவதானால், கூட்டமைப்புத் தலைவர்களிடம் தமிழ் மக்களின் நலனிலும் பார்க்கச் சுயநலமே மேலோங்கியிருந்தது. இந்தப் பின்னணியிலேயே கூட்டமைப்பு இப்போது முகங்கொடுக்கும் உட்கட்சி நெருக்கடியைப் பார்க்க வேண்டும்.

தமிழரசுக் கட்சியின் நிர்வாகத்திலுள்ள இரண்டு பிரதேச சபைகள் மாவீரர் துயிலுமில்லங்கள் தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானங்கள் கூட்டமைப்புத் தலைமையின் மீது தருணம் பார்த்து வீசப்பட்ட கணைகளாகும். முதலமைச்சரும் அவரைச் சுற்றியிருக்கும் சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்களும் அரசாங்கத்தின் பக்கம் சாய்கின்றார்கள் என்ற அபிப்பிராயம் சிறீதரனின் தலைமையை அங்கீகரிக்கும் கடும்போக்குப் பிரிவினரிடம் தோன்றியிருக்கின்றது. மாகாண முதலமைச்சரையும் கூட்டமைப்புத் தலைமையையும் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பு அரசியலுக்குள் இழுக்கும் முயற்சியாகவே மாவீரர் துயிலுமில்லங்களைத் துப்புரவு செய்து பேண வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருக்கின்றது. புலிகளின் ஆயுதப் போராட்டம் தமிழ் அரசியல் வரலாற்றில் ஒரு கறுப்புப் புள்ளி என்றும் அந்தத் துயர வரலாறு மறக்கப்பட வேண்டியது என்றும் வெளிப்படையாகக் கூறும் அளவுக்குக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு நெஞ்சுரம் இல்லை என்பது கடும்போக்கு பிரிவினருக்குத் தெரியும். அதனால்தான் மாவீரர் துயிலுமில்லம் என்ற துரும்பைத் தூக்கிப் போட்டிருக்கின்றார்கள். அது நியாயமான கோரிக்கைதான் என்றும் இப்போது அதனிலும் பார்க்க வேறு முக்கிய விடயங்கள் இருக்கின்றன என்றும் கூட்டமைப்புத் தலைமை பூசி மெழுகப் பார்க்கின்றதேயொழியக் கடும்போக்காளருக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுக்கத் தயாராக இல்லை.

தமிழரசுக் கட்சிக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாட்டைப் பார்ப்போம். இந்தப் பங்காளிக் கட்சிகள் தனித்துவமானவை என்று உரிமை கோருகின்ற போதிலும் இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் தனித்துவமான கொள்கை இவற்றிடம் இல்லை. கூட்டமைப்புக்கெனத் தனியான கொள்கை இருக்க வேண்டியதன் அவசியத்தை இக்கட்சிகள் ஒருபோதும் வலியுறுத்தவில்லை. தங்கள் அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதிலேயே இத்தலைவர்களுக்கு அக்கறை. தமிழரசுக் கட்சித் தலைமையுடன் எவ்வளவு முரண்பட்டாலும் இக்கட்சிகள் கூட்டமைப்பிலிருந்து ஒரு போதும் வெளியேறப் போவதில்லை. வெளியேறினால் அரசியல் எதிர்காலம் இல்லாமற்போய்விடும் என்பது இவர்களுக்கும் தெரியும். தமிழரசுக் கட்சிக்கும் தெரியும். அதனால்தான் இவர்கள் எவ்வளவு எச்சரிக்கைகளை விடுத்தாலும் என்னதான் காலக்கெடு விதித்தாலும் தமிழரசுக் கட்சி வளைந்து கொடுப்பதில்லை.


தமிழரசுக் கட்சி பங்காளிக் கட்சிகளைப் பொருட்படுத்தாதிருப்பதன் மூலம் இதுவரை எந்தப் பாதிப்பும் அதற்கு ஏற்படாத போதிலும் இதே-நிலை எப்போதும் தொடரும் என்று எதிர்பார்க்க முடியாது. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கடும்போக்குப் பிரிவினருக்கு எதிராகக் கட்சித் தலைமை உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் பங்காளிக் கட்சியினர் கடும் போக்குப் பிரிவினருடன் இணைந்து தமிழரசுக் கட்சிக்குத் தலையிடியைக் கொடுக்கலாம். பங்காளிக் கட்சிகளின் அண்மைக் காலச் செயற்பாடுகள் அத்தகைய வளர்ச்சிப் போக்குக்குச் சாதகமானவையாகவே உள்ளன. தேர்தல் அறிக்கைக்கு முரணாகக் கூட்டமைப்புத் தலைமை செயற்படுவதை அனுமதிக்க முடியாது என்று ஊடகவியலாளர் மாநாடொன்றில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 'இணைந்த சமஷ்டி என்று கூட்டமைப்பு வெளியிட்ட விஞ்ஞாபனத்தையே தேர்தல் அறிக்கை என்று இவர் குறிப்பிட்டார். நடைமுறைச் சாத்தியமற்ற அந்த அறிக்கையின் அடிப்படையில் இப்போது செயற்பட வேண்டும் என்பது எந்தப் பலனும் இல்லாத எதிர்ப்பு அரசியலுக்குக் கூட்டமைப்பை இழுப்பதாகும். சில தினங்களுக்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சம்பந்தனுக்கு அனுப்பிய நீண்ட கடிதத்தில் முதலமைச்சருக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்களும் புலிகளின் அரசியலுக்கு ஆதரவான கருத்துகளும் உள்ளடங்கியிருந்ததை இங்கு குறிப்பிட வேண்டும்.

உட்கட்சி நெருக்கடிகளையெல்லாம் பூசிமெழுகிச் சமாளித்துக் கொண்டு தொடர்ந்து மக்களை ஏமாற்றும் அரசியலை முன்னெடுப்பதா அல்லது தவறான போக்குகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கையை எடுத்து நடைமுறைச் சாத்தியமான தீர்வை நோக்கிய செயற்பாட்டை மேற்கொள்வதா என்ற கேள்வி இன்று கூட்டமைப்புக்கு முன்னால் எழுந்திருக்கின்றது. தமிழ் மக்களின் விமோசனத்தில் உண்மையான அக்கறை உண்டென்றால் புலம்பெயர் அமைப்புகளின் தப்புத்தாளத்துக்கு ஆடிக்கொண்டிராமல் மண்ணில் கால் பதித்து மேலேயுள்ள இரண்டாவது வழியைப் பின்பற்ற வேண்டும். மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாக ஏற்றுப் படிப்படியாக மேலதிக அதிகாரங்களைப் பெறுவதன் மூலம் அரசியல் தீர்வை அடைவதே இந்த வழி. எதிரணிக் கட்சிகள் இதுவரை கூறிவந்ததை நாங்கள் ஏற்பதா என்ற வரட்டுக் கௌரவத்துக்கு இடளித்தால் மக்களிடமிருந்து அந்நியப்பட நேர்ந்துவிடும். எதிர்க்கட்சியான கூட்டமைப்பின் உசுப்பேற்றல் பேச்சுகளுக்கு ஆதரவளித்த மக்கள் ஆளுங்கட்சியான கூட்டமைப்பிடமிருந்து சாதனைகளையே எதிர்பார்க்கின்றார்கள்.



**தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கடும்போக்குப் பிரிவினருக்கு எதிராகக் கட்சித் தலைமை உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் பங்காளிக் கட்சியினர் கடும் போக்குப் பிரிவினருடன் இணைந்து தமிழரசுக் கட்சிக்குத்தலையிடியைக் கொடுக்கலாம். பங்காளிக் கட்சிகளின் அண்மைக் காலச் செயற்பாடுகள் அத்தகைய வளர்ச்சிப் போக்குக்குச் சாதகமானவையாகவே உள்ளன.**

# பொலிஸாருக்கு உத்தரவு போட வடக்கு முதல்வரால் முடியாது



## கோத்தாபய திட்டவட்டம்



(கொழும்பு)

வடமாகாண சபையின் முதலமைச்சர் சீ.வீ. விக்னேஸ்வரனால் பொலிஸாருக்கு உத்தரவுகளை பிறப்பிக்க முடியாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு முதலமைச்சரைச்சாரும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், பொலிஸாருக்கு உத்தரவுகளை பிறப்பிக்கும் அதிகாரம் விக்னேஸ்வரனுக்கு கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அர்த்தமற்ற அறிக்கைகளை வெளியிடுவதனை தவிர்த்து சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தவே முனைப்புக் காட்ட வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்காக மக்கள் ஆணை வழங்கவில்லை என்பதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கைச் சேர்ந்த 80 வீத மானவர்கள் இராணுவத்தினர் பிரசன்னமாகியிருக்க வேண்டுமென்றே விரும்புகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு சுயாதீன ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர், மாகாணத்தின் சட்டம், ஒழுங்கு நிலைமைகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கடினமான முயற்சியில் ஈட்டப்பட்டுள்ள சமாதானத்தை நிலைநாட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்திய மீனவர்கள் இலங்கை மீன்பிடி வளங்களை அழித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். தெற்குடன் முரண்பாட்டை வளர்க்கும் வகையில் தமிழ் ஊடகங்கள் செயற்படக்கூடாது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# விமர்சனத்துக்கு அஞ்சி அபிவிருத்தியை கைவிடுவதா?

## அது நடக்காது என்கிறார் மகிந்த



(கொழும்பு)

எவ்வாறான விமர்சனங்கள் செய்யப்பட்டாலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும்போது அன்று போன்றே இன்றும் விமர்சனங்கள் எழுகின்றன. எனினும், இந்த விமர்சனங்களுக்கு அஞ்சி அபிவிருத்திப் பணிகளை கைவிடப் போவதில்லை.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் அமைக்கப்பட்ட காலத்திலும் இவ்வாறான விமர்சனங்கள் எழுந்தன.

1976 ஆம் ஆண்டு அணிசேரா நாடுகள் மாநாடு, சார்க் மாநாடு போன்ற பல முக்கிய நிகழ்வுகள் இந்த மண்டபத்தில் நடத்தப்பட்டுள்ளன.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளுக்காக செய்யப்படும் அனைத்து விடயங்களிலும் நன்மை ஏற்படும். சீனாவுடனான உறவுகள் மேலும் வலுவடைந்துள்ளது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# தனித்து விடப்படும் பிள்ளைகளுக்கு பாதுகாப்புக்கு புதிய பொறிமுறை

(கொழும்பு)

வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள் பெற்றோர்களின் பிள்ளைகள் ஏதேனும் பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்நோக்கியிருப்பின், அது குறித்து உடனடியாக அறிவிக்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மக்களிடம் கேட்டுள்ளது.

24 மணித்தியாலமும் இயங்குகின்ற தமது அவசர தொலைபேசி இலக்கங்களுக்கு அத்தகைய நிலைமைகளை அறிவிக்க முடியும் என பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொதுமுகாமையாளருமான மங்கல ரந்தெனிய குறிப்பிடுகின்றார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 0112 87 99 00 அல்லது 0112 87 99 02 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அத்தகைய நிலைமைகளைத் தெரிவிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தடுப்பூசி ஏற்றியதால் விபரீதம்


(கொழும்பு)

பலாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் வழங்கப்பட்ட தடுப்பு ஊசி பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றப்பட்டதன் பின்னர் ஒவ்வாமையினால் சுகயீனமுற்ற, ஐந்து பேர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் மாணவர்களுக்கு மூளை காய்ச்சலுக்கான இந்த தடுப்பூசி நேற்றுமுன்தினம் ஏற்றப்பட்டதாக பலாங்கொடை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி கூறியுள்ளார். இதனையடுத்து ஒவ்வாமை யால் சுகயீனமுற்ற மூன்று மாணவி களும் 2 மாணவர்களும் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# நவிப்பிள்ளையின் கொள்ளுப் பாட்டன் கண்டிக்கு வந்திருந்தால் நிலமை என்ன?

## கொழுந்துக்கூடை சுமப்பாரா நவி? கேள்வி எழுப்புகிறார் மனோ



(கொழும்பு)

இந்திய வம்சாவளி தமிழ் பூர்வீகத்தை கொண்ட தென்னாபிரிக்க பிரஜையான நவநீதம் பிள்ளை ஒரு இரும்பு பெண். அவர் ஒரு அரசியல்வாதி அல்ல. ஐ.நா. அதிகாரி, சட்ட அறிஞர். உலகம் முழுக்க வாழும் தமிழ் பெண்களுக்கெல்லாம் அவர் பெரும் உதாரணம்.

இந்திய வம்சாவளி தமிழர்களான நவநீதம்பிள்ளையின் முன்னோர் தென்னிந்தியாவில் இருந்து நல்லவேளையாக தெனனாபிரிக்காவுக்கு போனார்கள். இங்கு கண்டி சீமைக்கு கொண்டு வரப்பட்ட மலையக மக்களை போல் அவர்களும், தப்பித் தவறி அன்று இலங்கை வந்திருந்தால் இன்று என்ன நடந்திருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்?

அப்படி அவர்கள் இலங்கை வந்திருந்தால் அவர்களுக்கு பிறந்த நவநீதம் பிள்ளையும், இன்று இங்கு மலைநாட்டில் வாழும் பெரும்பாலான இந்திய வம்சாவளி தமிழ்ப்பெண்களைப் போல் கொழுந்து கூடையை சுமந்து கேள்விக் குறியைப் போல் முதுகு வளைந்து, உழைத்து உருக்குலைந்து போயிருப்பார் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பெண்கள் அணியான ஜனநாயக மகளிர் இணையத்தின் அமைவு தொடர்பான ஆலோசணைக் கூட்டம் இணையத்தின் செயலாளர் நந்தினி செல்வரத்தினம் தலைமையில் நேற்றுமுன்தினம் பாமன்கடை பணிமனையில் நடைபெற்றது.

அதன்போது உரையாற்றிய கட்சியின் தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கட்சியின் பெண்கள் அமைப்பான ஜனநாயக மகளிர் இணையம் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் படவுள்ளது. எமது பெண்கள் அணியின் செயற்பாடு ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டாலும், சம்பிரதாயபூர்வமான ஆரம்பத்தை நடத்த இப்போது நீங்கள் கட்சியுடன் இணைந்து முடிவு செய்துள்ளீர்கள்.

இதற்கு முன்னால் ஓகஸ்ட் மாதம் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்ட நமது கட்சியின் இளைஞர் அமைப்பான ஜனநாயக இளைஞர் இணையம் இன்று வீறுநடை போட்டு வருகிறது.

இதுபோல் இனி உதயமாகப் போகின்ற போகும் ஜனநாயக மகளிர் இணையமும் எழுச்சி நடைபோடும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இது எமது கட்சிக்குள் இன்று புதிய இரத்தம் பாய்ச்சப்பட்டு வரும் வளர்ச்சிப் போக்கை அடையாளப்படுத்துகின்றது.

மகளிர் இணையத்தில் இப்போதே தகுதி வாய்ந்த சகோதரிகள் பலர் இணைந்து கொண்டுள்ளார்கள். இன்னும் தகுதி வாய்ந்த பலர் எமது ஜனநாயக மகளிர் இணையத்தில் இணைநது கொள்ள முன்வரவேண்டும் என நான் வாழ்த்தி வரவேற்கின்றேன்.

ஆண்களால் வழிநடத்தப்படும் சமூக பாத்திரம் மாத்திரமே தங்களுக்கு வகுக்கப்பட்டது என்ற காலம் கடந்த சிந்தனையை பெண்கள் களைய வேண்டும். சமூகத்தை வழிநடத்தும் பாத்திரத்தை ஆண்களுடன் சமத்துவமாக நின்று பெண்களும் வகிக்கவேண்டும்.

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகை இழப்பு ஆடை ஏற்றுமதியில் சரிவு

## மாற்று ஏற்பாடுகளும் தோல்வி



(கொழும்பு)

ஜி.எஸ்.பி. வரிச்சலுகை கிடைக்காமையால் ஆடை ஏற்றுமதி வருமானத்தில் பெரும் சரிவு ஏற்பட்டமை தொடர்பான அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜி.எஸ்.பி. எனப்படும் வரிச்சலுகையை இழந்ததால், 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஆடை ஏற்றுமதி மூலம் கிடைத்திருக்க வேண்டிய 782 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் மனித உரிமைகள் நிலை மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதைக் காரணம் காட்டி, ஐரோப்பிய ஒன்றியம், இலங்கைக்கு வழங்கி வந்த வரிச்சலுகையை கடந்த 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிறுத்தியது.

இதனால், கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கையில் 25 ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதுடன், 10 ஆயிரம் பேர் வேலையை இழக்கும் நிலை ஏற்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக தகவல் வெளியிட்ட முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை பறிக்கப்பட்டதால், 2010 ஆம் ஆண்டில், 10 ஆடைத் தொழிற்சாலைகளும், 2011 இல் 11 தொழிற்சாலைகளும், மேலும் 4 தொழிற்சாலைகள் 2012 இலும் மூடப்பட்டன என்று கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகை பறிப்பினால், ஆடை ஏற்றுமதித் தொழில் பாதிக்கப்படவில்லை என்று அரசாங்கம் இதுவரை கூறி வந்தது குறிப்பிடத்தக்கது.

# பஸ்கட்டண அதிகரிப்பு ஏன்?

## ஐ.தே.க. காரணம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்காக அரசாங்கம் மேற்கொள்கின்ற அதிக செலவினங்களாலேயே பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரேன் பெர்ணான்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்காக அரசாங்கம் பாரிய செலவுகளை மேற்கொள்கிறது.


இந்த மாநாடு இலங்கைக்கு தேவையற்ற ஒன்று. இந்த செலவினங்கள் அனைத்தையும் நாட்டு மக்களே தாங்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாகவே அடுத்த மாதம் முதல் பேருந்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




சுன்னாகம் றோட்டறிக் கழகத்தின் 19 ஆவது பதவியேற்பு வைபவம் அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதிநிதி உரையாற்றுவதையும் விருந்தினர்களுக்கு சின்னஞ்சூட்டுவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (48)

# பாலம் அமைத்துத்தருமாறு மக்கள் அவசர கோரிக்கை



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஊற்றுப்புலம் கிராமத்தில் பழைய குடியிருப்புப் பகுதிக்கு செல்கின்ற ஒரேயொரு பிரதான பாதையில் உள்ள ஆற்றுப் பகுதியில் காணப்படுகின்ற ஒடுக்கு பாலத்தை எதிர்வரும் பருவ மழைக்கு முன் பாதுகாப்பாக செல்லக்கூடிய வகையிலாவது அமைத்துத் தருமாறு அந்த பிரதேச மக்கள் மீண்டும் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஊற்றுப்புலம் கிராமத்தில் உள்ள பழைய குடியிருப்பு பகுதியில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நாளாந்தம் கிளிநொச்சி நகர்ப் பகுதியினுடடான அனைத்து தேவைகளுக்கும் அதாவது வைத்தியசாலை, பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், வங்கி நடவடிக்கைகள், சந்தைத் தேவைகள் என எல்லாத் தேவைகளுக்கும் தங்கள் பிரதேசத்தில் இருந்து செல்வதற்குரிய ஒரோயொரு பிரதான பாதையே காணப்படுகிறது.

கடந்த காலங்களிலும் தற்போதுள்ள ஒடுங்கிய பாலத்தின் ஊடாக ஒரு முச்சக்கரவண்டி கூட பயணம் செய்யமுடியாத நிலையில் நோயாளர்களைக் கூட அவசர நிலைமைகளில் ஒடுக்கு பாலத்தின் மறுகரை வரை தூக்கிச் சென்றே முச்சக்கர வண்டியில் ஏற்றவேண்டும் அவ்வாறான சம்பவங்களும் இடம்பெற்றுள்ளது. அத்தோடு இறந்தவர்களைக் கூட நான்கு பேர் சேர்ந்து அந்த பாலத்தின் ஊடாக தூக்கிச் செல்ல முடியாது. தற்செயலாக ஒருவர் வைத்தியசாலையில் இறந்துவிட்டால் இறந்த உடலை பாலத்தின் ஒருபுறம் வரைக்குமே நான்கு சக்கர வாகனம் செல்ல முடியும் என்பதால் அங்கிருந்து வீடு நோக்கி தூக்கிச் சென்று மீண்டும் இறுதிக் கிரியைகளுக்காக வீட்டில் இருந்து மயானத்திற்கு தூக்கிச் செல்ல வேண்டும். இவ்வாறு அந்த மக்கள் மிகவும் அவலங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். அண்மையில் கிடைத்த வீட்டுத்திட்டத்திற்கு மூலப் பொருட்களைக் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களையும், செலவுகளையும் சந்தித்துள்ளனர்.

தற்போது புது முறிப்புக்குளம் புனரமைக்கப்பட்டு நீர் கொள்ளளவு உயர்த்தப்பட்டுள்ளதால் இனி வரும் காலங்களில் அந்த பாலத்தின் ஊடான போக்குவரத்து மேலும் சிக்கலுக்குள்ளாகியுள்ளது. எனவே விரைந்து சேதமடைந்துள்ள ஊற்றுப்புலம் ஒடுக்குப் பாலத்தை புனரமைக்குமாறு அவசர, அவசிய வேண்டுகோள் விடுக்கும் மக்கள் அடுத்த வருடமாவது நிரந்தர பாலம் ஒன்றினை அமைத்து தருமாறு கோரி நிற்கின்றனர். (29)

# கைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சுகாதார மருத்துவக்கழகத்தின் அனுசரணையுடன் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் ஜெய்ப்பூர் நிறுவனப் பயனாளிகளின் நன்மை கருதி வெளியிடப்படவுள்ள முழங்காலுக்கு மேலானது முழங்காலுக்கு கீழானது துண்டங்களின் பாராமரிப்பு எனும் கைநூல் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவன வளாகத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

ஜெய்ப்பூர் நிறுவனத்தலைவி டாக்டர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறும் இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை முறிவுநெரிவு வைத்திய நிபுணர் டாக்டர் கே.உமாபதி கலந்துகொள்ளவுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்



(27.10.2013 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் ஐப்பசி மாதம் 10 ஆம் திகதி.
பூசநட்சத்திரம் மாலை 6.30 வரை பின் ஆயிலியம்
சித்தம் அட்டமி பி.ப 4.52 வரை.
இராகுகாலம் 04.33- 06.03 வரை. சுபநேரம் 09.03- 10.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றப் பின்னடித்தல், குரங்குகளின் அட்டகாசத்தால் பழமரங்கள் பாழ்படும் நிலை கண்டு விசனம். |
| ரிஷபம் | மக்களை அதிகநேரம் காக்கவைப்பதால் அன்றாட நடவழக்கைகள் பாதிப்பு, காரியம் நிறைவேற்ற தொழிலாளர்களைத் தேடி அலைதல். |
| மிதுனம் | தெரிந்தவரை தெரியவில்லை எனக் கூறியதால் தொல்லை விலகல், மதின்மேல் பூனையாக இருப்பதால் தாமதமேற்படல். |
| கடகம் | எடுத்தெறிந்து பேசியதால் தொல்லை வந்து சேரல், தனியார் வங்கியில் கடன்பெற விண்ணப்பம். |
| சிம்மம் | மதிப்புக்கொடுத்ததினால் எண்ணிய செயல் இனிது முடிந்தது, வெளிச்சமின்மையால் விபத்தேற்படல். |
| கன்னி | பங்கு வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபமின்மையால் விசனம், விரும்பிய பெண்ணை மணமுடிக்க தடைபோட்டதால் பெற்றோருடன் களேபரம். |
| துலாம் | காரியங்கள் முற்றுப்பெறாது இழுபடுவதினால் தடுமாற்றம், மங்கள நிகழ்விற்கு சட்டவிரோத மின்சாரம் பெற்றதால் தண்டம். |
| விருச்சிகம் | மேலதிகாரிகளின் பாராட்டுக்கிடைத்ததால் மகிழ்ச்சி. துன்ப நிகழ்விற்கு பொருத்தமில்லாத மனை என எண்ணி விசனப்படல். |
| தனுசு | அவமானம் மனத்தாங்கல் நிகழ்வுகள் வந்து போகும், சட்டவிரோதமதுபானம் விற்பனை செய்ய முயன்றதால் கைதாகும் நிலை. |
| மகரம் | வெட்டுப்புள்ளிக்கு கழ இருந்தமையால் தொழில் கிடைக்காமை பற்றிய செய்தி யறிந்து கவலை, பிள்ளைகளை பராமரிக்கும் பொருட்டு விடுப்பு எடுப்பதால் கவலை. |
| கும்பம் | மஞ்சள் கோட்டுக்குள்ளும் விபத்து ஏற்படும் அபாய நிலை, தொழிலில் கண்ணோட்டம் செலுத்தாமையினால் நட்டம். |
| மீனம் | புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடல், ஒப்பந்த அடிப்படையில் வேலை வாங்கிவிட்டு சம்பளம் கொடுக்காமையினால் அவதி. |

# தனியார் கல்வி நிலையம் விஷமிகளால் எரிப்பு



(கரணவாய்)

நெல்லியடி விக்னேஸ்வர வீதியில் அமைந்துள்ள எக்ஸலண்ட் தனியார் கல்வி நிறுவனம் விஷமிகளால் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இக்கல்வி நிலையம் நெல்லியடிப் பகுதியில் சிறந்த நிலையமாக விளங்குவதாகவும் இதில் 800 மாணவர்கள் கல்வி பயில்வதாகவும் தெரிவிக்கப்படும் நிலையில் இக்கல்வி நிலையத்தின் 3 கொட்டகைகளும் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இக்கல்வி நிலையத்தின் நிர்வாக இயக்குநர் மாணவர்களின் கல்விக்காக 8 மாணவர்களுக்கு இலவசமாக கல்வி வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

# பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் .வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பங்குபற்றுவதற்கு ஒவ்வொரு சங்கங்களிலிருந்தும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படுவார் அவர்களின் வாக்கெடுப்பின் மூலம் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்படுவார்கள். (109)

* * * * *

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு செ. இலகுநாதன் தலைமையில் வீரசிங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் ஒவ்வொருவரை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# நோயாளர்களுக்கு புதிய மருந்து வகைகள்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் புதிய பொறுப்பதிகாரி ஆ. காந்தநேசன் வைத்தியசாலையில் இதுவரை இல்லாத பல மருந்துவகைகளை யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பெற்றுவந்து நோயாளர்களுக்கு நோய்களுக்கு ஏற்ப வழங்கிவருகின்றார்.

இதனால் தற்போது வெளி நோயாளர் பிரிவிலும் புதன்கிழமைகளில் நடைபெறும் வைத்திய சிகிச்சைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இதனால் வைத்தியசாலையில் தளபாட வசதிகள் போதாமல் இருப்ப தாக நோயாளர் நலன்புரி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (104)

# ரஷ்யாவுக்கு எச்சரிக்கை

(மொஸ்கோ)

ரஷ்யாவில் இனவெறியைக் கட்டுப்படுத்த வில்லை என்றால், 2018ஆம் ஆண்டில் அங்கு நடைபெறும் உலகக் கோப்பை கால்பந்து போட்டியை கருப்பின வீரர்கள் புறக்கணிப்போம் என்று ஐவரி கோஸ்ட் நாட்டைச் சேர்ந்த யாயா டோர் எச்சரித்துள்ளார்.

யாயா டோர், ஐவரி கோஸ்ட் தேசிய அணிக் காகவும், மான்செஸ்டர் சிட்டி கிளப் அணிக் காகவும் விளையாடி வருகிறார்.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டி யின் லீக் ஆட்டம் கடந்த புதன்கிழமை ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் நடைபெற்றது.


இந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் சிட்டி அணியும், ரஷ்யாவின் சிஎஸ்கேஏ அணியும்மோதின. இந்த ஆட்டத்தின்போது, ரஷ்ய இரசிகர்கள் இனவெறியைத் தூண்டும் விதமாக கோஷம் எழுப்பியதாக யாயா டோர் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த ஆட்டத்தைத் தொடர்ந்து இது குறித்து கருத்துத் தெரிவித்திருந்த யாயா, ரஷ்யாவில் இனவெறி நீடித்தால் 2018ஆம் ஆண்டில் நடை பெற உள்ள உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியை கருப்பின வீரர்கள் புறக்கணிப்போம் என்று எச்சரித்திருந்தார்.

யாயாவின் குற்றச்சாட்டை ரஷ்யாவின் சிஎஸ்கேஏ அணி மறுத்தது.

இது குறித்து ஒழுங்கு நடவடிக்கை விசா ரணை வரும் 30ஆம் திகதி நடைபெற உள்ளது. விசாரணையில், யாயாவின் குற்றச்சாட்டு உண்மை என நிரூபிக்கப்பட்டால், கால்பந்து மைதானத்தை சிஎஸ்கேஏ அணி மூடும் நிலை ஏற்படும்.

ஐவரி கோஸ்ட் நாட்டைச் சேர்ந்த டொம்பியா, சிஎஸ்கேஏ கிளப் அணிக்காக விளையாடி வரு கிறார். இனவெறி குற்றச்சாட்டு தொடர்பாக அவர் கூறுகையில், சிஎஸ்கேஏ அணிக்கு ஆதரவாகத்தான் இரசிகர்கள் குரல் எழுப்பினர். யாயா கூறியதுபோல, இனவெறியைத் தூண்டும் விதமாக இரசிகர்கள் கோஷம் எழுப்பவில்லை. இப்பிரச்சினையை யாயா பெரிதுபடுத்துகிறார் என்று தெரிவித்தார்.



# கனமழையில் கரைந்தது ஐந்தாவது ஆட்டம்

(கட்டாக்)

அவுஸ்ரேலிய, இந்திய அணிகளுக்கிடையில் நேற்று இடம்பெறவிருந்த 5ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி கனமழை காரணமாக கைவிடப்பட்டது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடை யிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் அவுஸ் ரேலிய அணி 2–1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இந்நிலையில், ஐந்தாவது ஒரு நாள் போட்டி நேற்று ஒரிசா மாநிலம் க்காக்கில் இடம் பெறவிருந்தது. இருப்பினும் அங்கு தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதையடுத்து, நேற்று ஆடுகளத்தை பார்வையிட்ட நடுவர்கள், போட்டியைக் கைவிட முடிவு செய்தனர். இதை யடுத்து, ஆஸி.–இந்திய 5ஆவது ஒருநாள் போட்டி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## டெஸ்ட் அணிக்கு வேண்டும் சகீர், சேவாக்

இந்திய டெஸ்ட் அணியில் சேவாக், சகீர் கான் இருவரும் உடனடியாகச் சேர்க்கப்பட வேண்டு மென இந்திய அணியின் முன்னாள் தலைவரும், நேர்முக வர்ணனையாளருமான சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் சிரேஷ்ட வீரர்களாக சேவாக், சகீர்கான் இருவரும் அண்மைக்காலத்தில் பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்காத நிலை யில், அண்மைக்கால டெஸ்ட் போட்டிகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்திய அணி தொடர்ந்து 13 டெஸ்ட் போட்டிகளை வெளிநாடுகளில் விளையாடவுள்ள நிலையில், அனுபவமும், வெளிநாட்டு ஆடுகளங்கள் குறித்த அறிவும் கொண்ட வீரர்கள் இந்திய அணியில் தேவைப்படுவதாகக் குறிப்பிட்ட சௌரவ் கங்குலி, அதன் காரணமாக சகீர்கானும், டீசவாக்கும் உட னடியாக இந்திய டெஸ்ட் அணிக்குச் சேர்க்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# மீளழைப்பு



அணியில் உள்ள இளம் வீரர்களை ஊக்கு விக்கும் வகையில் ஓய்வுபெற்ற கென்ய வீரர்கள் இருவரை அதன் கிரிக்கெட் சபை மீள அழைத் துள்ளது.

ருவென்ரி–20 உலகக் கோப்பைக்கான தகுதிச் சுற்று தேர்வுகள் அடுத்த மாதம் ஐக்கிய அரபுக் குடியரசு நாட்டில் நடைபெற் உள்ளன. நவம்பர் 15ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரை நடைபெறும் இந்தப் போட்டிகளில் 16 அணிகள் பங்கு கொள்ளும். இவற்றிலிருந்து தேர்வு செய்யப்படும் 6 அணிகளே அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பங்காளதேஷில் நடைபெற உள்ள உலகக் கோப்பை ருவென்ரி–20 போட்டிகளில் விளையாடும் தகுதியைப் பெறும்.

இந்த ஆண்டிற்கான சர்வதேசக் கோப்பை மற்றும் உலக கிரிக்கெட் லீக் தொடரில் ஏமாற் றத்தைப் பெற்ற கென்யா அடுத்த வருடத்திற்கான உலகத் தேர்வினுள் தகுதி பெறும் முனைப்புடன் உள்ளது. இந்த அணியில் தலைவராகவும், துணைத் தலைவராகவும் விளையாடி வந்த ஸ்டீவ் டிக்காலோ (வயது 42) மற்றும் தோமஸ் ஓடாயோ (வயது 36) ஆகிய இருவரும் சர்வதேசப் போட்டி களில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டனர். ஆயினும் உள்ளூர் போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வருகின்றனர். அணியில் உள்ள இளம் வீரர்களை ஊக்குவிக்க ஒரு துடிப்பான தலைமை தேவை என்று எண்ணும் கென்யா கிரிக்கெட் சங்கம் இவர் கள் இருவரையும் மீண்டும் விளையாட அழைத் துள்ளது. சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றபோதிலும், நைரோபி கிரிக்கெட் போட்டி களில் இவர்கள் திறமையுடன் விளையாடி வரு கின்றனர். எனவே, கென்யா அணியைத் தலைமை தாங்கவும், வழி நடத்தவும் இவர்களை மீண்டும் அழைத்துள்ளோம் என்று கிரிக்கெட் சங்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மே.தீவுகளின் புதிய பணிப்பாளர்

மேற்கிந்திய தீவுகளின் கிரிக் கெட்டுக்கான பணிப்பளராக ரிஷ்செட் பைபஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் பிராந்திய மற்றும் சர்வதேச கிரிக்கெட் வீரர் களின் அபிவிருத்திக்கு தமது நிபுணத் துவ அனுபவங்களை அவர் வழங்க வுள்ளார்.

நவம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் முன்று வருடங்களுக்கு அவர் மேற்கிந்தியத்தீவுகளின் கிரிக்கெட்டுக் கான பணிப்பாளராக செயற்படவுள்ளார்.

பல விண்ணப்பங்களை மீளாய்வு செய்த பின்னரே பைபஸ்சை தெரிவு செய்ததாக மேற்கிந்தியத்தீவுகள் கிரிக் கெட் நிறுவனத்தின் சிரேஷ்ட நிறை வேற்று அதிகாரி கூறியுள்ளார். மே.தீவு கள் கிரிக்கெட் நிறுவனம் ரிஸ்செட்டின் சேவையைப் பெறுவது பாரிய ஒன் றெனா அவர் மேலும் கூறியுள்ளார்.

# சர்ச்சை



பாகிஸ்தான் அணியுடனான இரண்டாவது டெஸ்டில் பந்தை சேதப்படுத்திய சர்ச்சையில் தென்னாபிரிக்கா சிக்கி யுள்ளது. பாகிஸ்தான் 2ஆவது இனிங்ஸிற்காக ஆடிய போது தேனீர் இடைவேளைக்கு பின்னர் 31ஆவது ஓவரின் போது நடுவர்கள் இயன் கவுல்ட், ரோட் டக்கர் இருவரும் திடீரென தென்னாபிரிக்க கப்டன் ஸ்மித்தை அழைத்துப் பேசினர். அப்போது உங்களது வீரர்களில் ஒருவர் பந்தை சேதப்படுத்தியது தெரியவந்திருப்பதாகவும், அதனால் வேறு பந்து மாற்றப்படுவதாகவும் கூறினர். அத்துடன் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) புதிய விதிப்படி பந்தை சேதப்படுத்திய புகாரில் சிக்கிய தென்னாபிரிக்க அணி யைத் தண்டிக்கும் விதமாக எதிரணியான பாகிஸ்தானுக்கு 5 ஓட்டங்கள் மேலதிகமாக வழங்கப்பட்டது.

இதற்கிடையே, தென்னாபிரிக்க வீரர் பிளிசர்ஸ் தான் பந்தை சேதப்படுத்தியது தொலைக்காட்சி ரீப்ளே காட்சியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் தனது பேண்ட்டில் உள்ள ஜிப்பில் பந்தை தேய்த்து சேதப்படுத்த முயற்சித்தது தொலைக்காட்சியில் தெளிவாகத் தெரிகிறது. இந்த விவ காரம் உலகின் முதல்நிலை அணியான தென்னாபிரிக்காவுக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. பந்தை சேதப்படுத்திய பிரச்சினையில் தண்டனை ஓட்டங்களாக எதிரணிக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்படுவது இது 2ஆவது நிகழ்வாகும். இதற்கு முன்பு 2006ஆம் ஆண்டு லண்டன் ஓவலில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் பந்தை சேதப்படுத்தியதாக பாகிஸ்தான் அணி இதே போன்ற நடவடிக்கைக்குள்ளானது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தான் வெளிநடப்பு செய்ததால் அந்த டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இறுதிப் பட்டியல்

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிக்கான இறுதிப் பட்டியலில் 5 பயிற்றுவிப்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் களுக்கான நேர்முகத் தேர்வுகள் விரைவில் இடம்பெறவுள்ளதாக வும் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய பயிற்றுவிப்பாளரான கிரஹம் போர்ட் எதிர்வரும் ஜனவரியுடன் தனது பதவியிலிருந்து விலகவுள்ள நிலையில், புதிய விண்ணப்பங்களை இலங்கை கிரிக்கெட் சபை கோரியிருந்தது. இதன்போது 11 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. இந்நிலையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் சபை செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, 2 வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்களும், 3 உள்ளூர் பயிற்றுவிப்பாளர்களும் இறுதிக்கட்ட நேர் முகத் தேர்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் இடம்பெற வுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. இது தவிர, இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 23 வயதிற்குட்பட்ட 5 வீரர்களை இலங்கைத் தேசிய ஒப்பந்தத்தில் உள்ளடக்குவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது.

# இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க பாகிஸ்தான் போராட்டம்



(டுபாய்)

இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கும் முனைப்புடன் பாகிஸ் தான் அணி போராடி வருகின்றது.

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி டுபாயில் நடைபெற்று வருகின்றது.

418 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் பாகிஸ்தான் அணி முதல் நான்கு விக்கெட்டுக்களையும் 70 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்துத் தடுமாறியது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் மிஸ்பா உல் ஹக் மற்றும் அசாட் ஷபீக் இணை பொறுப்புடன் ஆடியதுடன் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க பெரும் பிரயத்தனம் செய் தது. இருப்பினும் 197 ஓட்டங்களைப் பெற்றவேளை இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டவேளை, பாகிஸ்தான் அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 218 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 88, யுனிஸ்கான் 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். அசாட் ஷபீக் 268 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 114 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளார். டெஸ்ட் அரங்கில் அசாட் ஷபீக் பெற்ற நான்காவது சதமாக அமைந்தது. பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 99. தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸ் 517.

# தண்டனை குறைப்பு



குரோஷியாவின் முன்னணி ரென்னிஸ் வீரர் மரின் சிலிச் ஊக்கமருந்து பயன்படுத்தியது கடந்த மே மாதம் கண்டுபிடிக்கப்பட்டு அவருக்கு 9 மாத கால தடை விதிக் கப்பட்டது. இதை எதிர்த்து அவர் சுவிட்சர்லாந்தில் உள்ள விளையாட்டுக்கான மத்தியஸ்த நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தார். தான் வேண்டுமென்றே ஒரு போதும் ஊக்கமருந்து உட்கொண்டதில்லை என்றும், எனவே தடையை நீக்க வேண்டும் என்றும் வாதிட்டார். அதே சமயம் சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் அவரது தடை காலத்தை 2 ஆண்டுகளாக அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட மத்தியஸ்த நீதிமன்றம் அவருக்கு விதிக்கப்பட்ட 9 மாத கால தடையை 4 மாதமாகக் குறைக்க உத்தரவிட்டது. இதன்படி 25 வயதான சிலிச்சின் தண்டனைக் காலம் ஒக்ரோபர் 25ஆம் திகதியுடன் முடிவடைந்தது. அடுத்த வாரம் நடக்கும் போட்டிகளில் அவர் பங்கேற்க முடியும்.

# இலங்கை கிரிக்கெட்டுடன் மீண்டும் ஹமீடியா

(கொழும்பு)

மூன்று வருட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இலங்கை கிரிக்கெட் வீர,வீராங்கனைகளுக்கான உத்தியோகபூர்வ ஆடைகள் வழங்க கிடைத்ததையிட்டு பெருமிதம் அடைவதாக ஹமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீத் தெரிவிக்கின்றார்.

இலங்கை கிரிக்கெட் வீர, வீராங்கனைகள், 19 வயதின்கீழ் இலங்கை வீரர்கள் ஆகியோருக்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு ஆடைகளை வழங்கும் பொருட்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் ஹமீடியா நிறுவனம் உடன்படிக்கை ஆவணத்தை பரிமாற்றிக்கொண்டது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர் ஜயந்த தர்மதாசவும் ஹமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீதும் இந்த உடன்படிக்கை ஆவணத்தை வைபவரீதியாக பரிமாற்றிக்கொண்டனர்.



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட வடமாகாண வீர,வீராங்கனைகளுக்கான கராத்தேப் போட்டி கடந்த 19,20ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு சி.எஸ்.சி. கராத்தே வீரர்கள் முதன் முறையாக பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர். குறிப்பாக, இவர்கள் தங்கம், வெள்ளி, வெண்கலம் உட்பட 25 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர். பதக்கம் வீரர்கள் பிரதம ஆசிரியர் சென்.சே விஜயராஜ் மற்றும் கராத்தே ஆசிரியர்களுடன் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி.)

# அரச அதிபர் வெற்றிக் கிண்ண கால்பந்து அரையிறுதிக்கு முன்னேறிய அணிகள்

(பருத்தித்துறை)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு கரவெட்டி, நல்லூர், தெல்லிப்பளை, பருத்தித்துறை பிரதேச செயலக அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்படும் பிரதேச செயலக ஊழியர் அணிகளுக்கிடையிலான அரச அதிபர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் பருத்தித்துறை கொலின்ஸ் மற்றும் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக மைதானங்களில் நடைபெற்றது.

மாவட்ட செயலக அணியுடன் 16 பிரதேச செயலக அணிகளும் இப்போட்டியில் பங்குகொண்டன. இருப்பினும் இப்போட்டித் தொடரின் காலிறுதிக்கு தெல்லிப்பளை, வேலணை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சங்கானை, கரவெட்டி, நல்லூர், நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலக அணிகள் தகுதி பெற்றன.

முதலாவது காலிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும், வேலணைப் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளைப் பிரதேச செயலக அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும், யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் இரு அணிகளும் சிறப்பாக ஆடியபோதும், பருத்தித்துறை பிரதேச செயலக அணி உரிய முறையில் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி கோல்களைப் பெற்றுக் கொண்டதுடன் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் சங்கானைப் பிரதேச செயலக அணியும், கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கரவெட்டி பிரதேச செயலக அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதியாக நடைபெற்ற நான்காவது காலிறுதிப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியும், நெடுந்தீவு பிரதேச செயலக அணியும் மோதின. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதிப் போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும், முதலாவது அரையிறுதிப் போட்டியில்கரவெட்டி பிரதேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மோதவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.,93)




# இன்றைய ஆட்டம்

(தெல்லிப்பளை)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டமொன்று இன்றைய தினம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

ஒரு நாள் இனிங்ஸ் போட்டியாக இடம்பெறவுள்ள இப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

(அளவெட்டி)

தெல்லிப்பளைக் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் 14,16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகளே இன்றைய தினம் இடம்பெறவுள்ளதாகவும், போட்டி நிரல்கள் ஏற்கனவே ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதால், பங்குகொள்ளும் அனைத்து அணிகளையும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (93)

(யாழ்ப்பாணம்)

நியூஸ்ரார் வெற்றிக் கிண்ண ருவென்ரி-20 தொடரின் ஆட்டமொன்று இன்றைய தினம் யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இதில் ஸ்ரான்லி மற்றும் ஜொலிஸ்ரார் அணிகள் மோதவுள்ளன.

# தேசியத்தில் அசத்திய யாழ். செயலகம்

அரச அலுவர்களுக்கிடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட செயலக ஆண்கள் மற்றும் கலப்பு அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன. உள்நாட்டு அமைச்சினால் நடாத்தப்பட்ட அரச அலுவலர்களுக்கிடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு விளையாட்டு அமைச்சு மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவு இறுதிப் போட்டியில் கொழும்பு பொலிஸ் அணியும், யாழ். மாவட்ட செயலக அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 23-13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற கலப்பு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் கொழும்பு பொலிஸ் நிலைய அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் யாழ். மாவட்ட கலப்பு அணி 18-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுகிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், பொலிஸ் நிலைய அணியும் மோதின. இதில் யாழ்.மாவட்ட பெண்கள் அணி 20-13 என்றபுள்ளிகள்அடிப்படையில் தோல்வியுற்றது. இப்போட்டியின் அணி முகாமையாளர்களாக முன்னாள் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ரூபசிங்கம் மற்றும் மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுநர் ஈசா ஆகியோர் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (93)

# ஊக்க மருந்திற்கெதிரான சட்டமூலம் நிறைவேற்றம்



(கொழும்பு)

விளையாட்டுகளில் ஈடுபடும்போது ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு எதிரான சட்டமூலம் இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

விளையாட்டில் ஈடுபடுகையில் ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு எதிரான சர்வதேச சாசனத்தை அமுல்படுத்தி, ஊக்கமருந்துகளை தடை செய்வதற்கான முகவர் நிலையமொன்றை இலங்கையில் நிறுவுவதன் மூலம், அது தொடர்பான சட்டங்களை நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாக அமைந்துள்ளது.

இதற்கமைய மேல் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்படும் ஒருவருக்கு இரண்டு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு சிறைத்தண்டனை விதிக்க முடியும் எனவும் அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர ஐந்து இலட்சம் ரூபாவிற்கு குறையாத மற்றும் பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படவுள்ளது.

குற்றவாளியாக காணப்படும் வீரர், அணியொன்றில் அங்கம் வகிக்கின்ற பட்சத்தில் அவரது செயற்பாடுகளை குறிப்பிட்ட சில வருடங்களுக்கு தடை செய்வதற்கும் இந்த சட்டத்தின் ஊடாக வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இருவாரங்களுக்கு முன் சாவகச்சேரி பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தின்போது மாவீரர்

# சர்ச்சையாக உருவெடுத்திருக்கும் துயிலும் இல்லங்கள் விவகாரம்

– சாலையூரான் –



துயிலும் இல்லங்களை துப்புரவாக்கி பேணவேண்டுமென தமிழ் கூட்டமைப்பின் உறுப்பினரொருவர் முன்வைத்த கருத்தை அடுத்து இந்த விவகாரம் கவனத்துக்குரிய ஒரு செய்தியாக மாறியது.

சாவகச்சேரி பிரதேசசபையின் இக்கூட்டத்துக்குப் பிறகு தமிழ் கூட்டமைப்பின் கீழுள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேசசபை கூட்டத்தில் இந்த துயிலும் இல்லங் களை பராமரிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்ததை அடுத்து பாதுகாப்பு தரப்பு இந்த விவகாரத்தில் தலையிட்டுள்ளது.

மரணித்த புலிகளின் துயிலும் இல்லங்களை சீராகப் பேணுவது என்பது விடுதலைக்காக தம் உயிரை நீத்த புலிகளின் தியாகங்களுக்கு அளிக்கும் உயரிய மதிப்பு என்பதற் கப்பால் தொடர் போராட்டத்துக்கான போராளிகளின் அணி சேர்க்கைக்கு வலுச்சேர்க்கும் ஒன்றாகவும் இந்த துயிலும் இல்லங்களுக்கு வழங்கப் படும் கௌரவம் அமைந்திருந்தது.

போரில் மரணித்த புலிகளுக்கான மாவீரர் தின நிகழ்வுகள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் கொண்டாடப்படும் ஒரு நிகழ்வாக உருமாற்றம் பெற்றபின் வெளி உலகில் புலிகளின் பாரிய நிதி ஈட்டத்துக்கு வலுச்சேர்க்கும் நிகழ்வுகளாகவும் இவை வளர்ச்சி கண்டன.

இறுதிப்போரில் புலிகளும் பொது மக்களும் எதிர்கொண்ட இழப்பை போன்றே படையினரும் பாரிய இழப்பை எதிர்கொண்டதன் ஒரு மறுவிளைவாக இந்த துயிலும் இல்லங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளிலும் படையினர் இறங்கி இருந்தனர்.

இதற்குப்பின்னர் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற தேர்தல்களின் போது தமிழ்மக்களிடையே இனத்துவ உணர்வு களை தூண்டிவிடும் ஒரு அரசியல் பிரசாரமாக போரில் மரணித்த பொதுமக்களுடன் மறைந்த போராளி களையும் நினைவுகூர வேண்டுமென் பதும் தமிழ் கூட்டமைப்பினரின் ஒரு கருத்தாக இருந்ததால் பதிலுக்கு படையினரும் அதனை ஒரு சர்ச்சையாக நோக்கும் நிலையும் அப்போதிருந்தே உருவாகி இருந்தது.

கரைச்சி பிரதேச சபையின் இந்த துயிலும் இல்லங்கள் மீதான தீர்மான அறிவிப்பை அடுத்து கனகபுரம், முழங்காவில், தேராவில் இடங்களிலுள்ள துயிலும் இல்லங் களை படையினர் சுற்றிவளைத்திருப்ப துடன் அவற்றைச் சூழ முட்கம்பி வேலிகளை அமைப்பதிலும் இராணுவத்தினர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பதிலுக்கு இந்த துயிலும் இல்லங்களை இராணுவம் அபகரிக்க முனைந்தால் சிவில் சமூகத்தையும் இணைத்துக்கொண்டு போராட்டத்தில் இறங்கப்போவதாக தமிழ்க் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

மரணித்த புலிகளை கௌரவிக்க முயற்சிப்பது யுத்தத்தில் புலிகளை அழிப்பதற்காக படையினர் எதிர் கொண்ட இழப்புக்கள், சிரமங்களை மறுதலிக்கும் ஒரு முயற்சியாக படைத்தரப்பு நோக்க முனைவதும் பதிலுக்கு இந்த துயிலும் இல்லங்களை தமிழக் கூட்டமைப்பினர் நிர்வகிக்க முயற்சிப்பதை இராணுவம் தடுக்கும் போது அதனை தமிழ் மக்களின் தன்மானப்பிரச்சினையாக்கி முறுகல் நிலையொன்றுக்கு தமிழ் மக்களை கூட்டமைப்பினர் தூண்ட முனைகின்ற ஒரு போக்கும் இப்போது முனைப்பு பெற்றிருக்கின்றன.

பிந்தியதாக வடக்கு மாகாண சபையின் புதிய நிர்வாகம் தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வசதியாக தேவையான ஆளணிகள், வாகனாதிகளின் விபரங்களை அரசு அறிவித்திருக்கிறது. அத்தோடு சேர்த்து அடுத்த நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டில் வடக்கின் அபிவிருத்திக்கென 17 பில்லியனுக்கும் அதிகமான தொகையை ஒதுக்கீடு செய்திருப்ப தாகவும் அரசு அறிவித்திருக்கிறது.

வடக்கில் போருக்குப்பிறகு மீளக்குடியமர்ந்த மக்களின் அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுப்பதில் அரசும் தமிழ் தலைமைகளும் இன்னும் அதிக தூரம் பயணிக்க வேண்டியிருக்கும் நிலையில் அரசு மேற்கொள்ளும் வள ஒதுக்கீடுகளை பாதிப்புக்குள்ளான தமிழ்மக்களுக்கு முறையாக கிடைக்க தேவையான ஒழுங்குகளை மேற்கொள்வதே இன்று வடக்கு மாகாண நிர்வாகத்தின் தலையாய பணியாகும்.

அதனை விடுத்து அரசுக்கும் படைகளுக்கும் தன்மானப் பிரச்சினைகளை கிளறிவிடும் வகையில் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை வலியுறுத்திக்கொண்டிருப்பதால் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் நன்மையெதுவும் கிட்டப்போவதில்லை.

# பிழையின்றித் தமிழ் 53

– ஞானச்செல்வன் –

குறைபாடுகள்

“சிலநாட்களுக்கு முன் காலமான அறிஞர் அண்ணாவின் வளர்ப்பு மகன் பரிமளம்” என்று ஒரு தொடர் சிற்றிதழ் ஒன்றில் பார்த்தோம். இச்சொற்றொடரில் சொற்கள் ஆளப்பட்டுள்ள முறைமை சரியா?

சில நாட்களுக்கு முன் காலமானவர் பரிமளம் இவர் அறிஞர் அண்ணாவின் வளர்ப்பு மகன். ஆனால் அறிஞர் அண்ணா சிலநாட்கள் முன் காலமானவர் என்பது போன்ற செய்தியைத் தரும் இத் தொடரமைப்பு பிழை. பின்னர் எப்படி இவ்வாக்கியத்தை அமைக்கலாம்?

“அறிஞர் அண்ணாவின் வளர்ப்பு மகனும் சில நாட்கள் முன்னர் காலமானவரும் ஆன பரிமளம்” என்று தெளிவாக எழுதலாமே!

பேச்சு வழக்கிலுள்ள சில சொற்களை நாம் இந்நாளில் பிழையாக - கொச்சையாகக் கருது கிறோம். எடுத்துக்காட்டாக “அந்தப் பொம்பளை செய்த வேலை” எனும் தொடரில் பொம்பளை என்னும் சொல் ஒருவரை அவமதிப்பதாகக் கருதுகி றோம். அந்த அம்மா என்றோ, அந்தப் பெண்மணி என்றோ சொன்னால், யாரும் சினம் கொள்வதில்லை (யாரய்யா பெண்மணி, அம்மா என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எல்லாரும் மேடம்தான். அதுவும் போய் “மேம்”). பொம்பளை என்றால் திட்டுவதாகக் கொள்ளுகிறார்கள்.

பெண் பிள்ளை என்னும் சொல்தான் பொம்பளை என்று மருவிற்று. ஆண்பிள்ளை ஆம்பளை ஆயிற்று. ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்றுரைத்தால் யாரும் சினம் கொள்ளார். “பொம்பளே” என்று சொன்னால் போதும், “அது எப்படி என்னை அந்தப் பொம்பளை என்று சொல்லலாம்” என்று எவரும் வம்புக்கு வருவார்கள். ஆனால், “அவன் ஆம்பளைடா” என்றால் யாரும் சினம் கொள்ளுவது இல்லை. மாறாக, ஆம்பளை என்று குறிப்பிட்டால் பெருமையாகவே கருதுகிறார்கள். (சரியான ஆம்பளைடா அவன்!)

ஒரு நிகழ்ச்சிக்கு வருதல் குறித்தோ, ஒரு செயலைச் செய்து




முடிப்பது குறித்தோ பேசும்போது, பலர் கண்டிப்பாக எனும் சொல்லை ஆளுகிறார்கள். இது “ஷ்யூர்” என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நிகரானது என்று கருதிச் சொல்லப்படுகிறது.

ஒருமை, பன்மை மயக்கங்கள்:

“பரீட்சைகள் தொடங்கியது” இப்படி ஒரு செய்தி. அது எப்படி இப்படி ஒரு தவறு அடிக்கடி நிகழ்கிறது? ஆங்கிலச் செய்தி இப்படி வருமா? பரீட்சைகள் தொடங்கின என்றுதானே சொல்ல வேண்டும்?

“பூகம்பத்தால் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தது” என்று செய்தி படிக்கிறார்கள். வீடுகள் இடிந்து விழுந்தன என்று சொல்ல வேண்டும் என்ற எண்ணமே இல்லை.

சிறிய சிறிய தவறுகள்தாம் இவற்றைக் கூட திருத்திக் கொள்ள மனமில்லையே.

“என் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த வெற்றி, திருப்புமுனைகள் எல்லாமே அவரால்தான் கிடைத்தது”

இப்படி ஒரு வாக்கியத்தைப் படிக்க நேர்ந்தது. எல்லாமே என்ற பன்மைக்கேற்ப, கிடைத்தன என்று பன்மையில் முடிக்க வேண்டும். அவரால்தாம் கிடைத்தன என்று எழுதினால் இன்னம் சரி. (அவர்தாம் - அவன்தான்)

ஒருமை பன்மை மாறிவர வாக்கியம் அமைப்பதுபோல் மற்றொரு பிழை ஒற்றெழுத்து விட்டுவிடுதலாகும்.

“சத்தியம் என்பது இவ்வுலகில் கடைபிடிக்க வேண்டியது” இத்தொடரில் கடைப்பிடிக்க வேண்டியது என்று வல்லொற்று (ப்) வர வேண்டும். கடை பிடிக்க என்றால் ஒரு கடையை குடிக்கூலிக்கு (வாடகைக்குப்) பிடிக்க என்று பொருள்.

வாக்கிய அமைப்பில் தெளிவு இருத்தல் வேண்டும். ஓரிதழில் நாம் படித்ததொரு வாக்கியம்:

“நமக்கு எதையெல்லாம் பிறர் செய்யக் கூடாது என்று நினைக்கிறோமோ அதையெல்லாம் நாம் பிறருக்கும் செய்யக் கூடாது”

இச்சொற்றொடரை “எவையெல்லாம் பிறர் நமக்குச் செய்யக் கூடாது என்று நினைக்கிறோமோ அவையெல்லாம் பிறர்க்கு நாம் செய்யக் கூடாது” என்று மாற்றிப் பாருங்கள். ஒரு தெளிவு இருக்கும். (எவற்றையெல்லாம் - அவற்றையெல்லாம் என்று எழுதினால் இலக்கணம் பிறழாது; ஆனால் கடினமாகத் தோன்றும்.)



# பழங்களின் ராஜா!

**து**ரியன் பழம் தென்னிலங்கையில் அது விற்கப்படும் இடங்களைக் கடந்து செல்வோருக்குத் தெரியும், மிக நீண்ட தூரத்திற்கு அதன் வாசனையின் ஆக்கிரமிப்பு இருக்கும்.. துரியா ஸிபெத்தினஸ் என்ற தாவரவியல் குடும்பத்தை சேர்ந்த இந்த பழ ரகம் மலேசியாவை தாயகமாகக் கொண்டதாகும். உலகில் சுமார் 25 ரகங்களில் காணப்படும் துரியன் பழங்களில் 9 ரகங்கள் மட்டுமே உண்ணத்தக்கவையாகும்.

இந்தப் பழம் பழங்களின் ராஜா என அழைக்கப்படுகிறது. இதற்கு காரணம் பலாப்பழத்தை போல அளவில் பெரிதாக இருந்தாலும், இதில் 1 முதல் அதிகபட்சமாக 6 சுளைகள் மட்டுமே இருக்கும். அத்துடன் நன்கு பழுத்த இப்பழத்தின் மணம் புனுகுப் பூனையின் புனுகு வாடையைப்போல இருக்கும். மலேசிய மற்றும் தாய்லாந்து மொழிகளில் துரி என்றால் முள் என அர்த்தமாம். அதேபோல, புனுகுப்பூனையை ஸிபெத்தினா என அழைப்பார்களாம். புனுகின் மணத்தைப் போலவும், மேல்தோலில் முட்கள் நிறைந்தும் காணப்படுவதாலேயே இதை துரியா ஸிபெத்தினஸ் என அழைக்கின்றனர்.

இந்த பழத்தில் அதிக அளவில் ஈஸ்ட்ரோஜென் ஹோமோன்கள் நிறைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்த ஹோமோன்கள்தான் கரு உருவாவதில் பிரதான பங்கு வகிப்பவையாகும். அதனால், குழந்தைப்பேறு வேண்டுபவர்கள் இப்பழத்தை அதிகமாக பயன்படுத்தினால் விரைவில் கருத்தரிப்பர் என்ற கருத்து பரவலாக உள்ளது. அதன் காரணமாகவே இப்பழத்திற்கான மவுசும் அதிகமாகவே உள்ளது. வெளிநாடுகளில் இந்தப் பழத்தை வாங்குவதற்காக ஓராண்டுக்கு முன்னரே பதிவு செய்து வரிசையில் காத்திருப்போர் நூற்றுக்கணக்கில் உள்ளனர் என்பதே இப்பழத்திற்கான டிமாண்டை தெரிவிக்கும்.

துரியன் பழ மரங்கள் மிக உயரமான மரங்களாகும். 100 அடி உயரம் வரை வளரும் இம்மரங்களின் மீதேறி பழங்களை பறிக்க முடியாது. கொத்து கொத்தாய் பூக்கும் மலர்களிலிருந்து பெரும்பாலானவை காய்களாக மாறும். இவை பழமாகும்போது அவற்றின் பாரம் தாங்காமல் கிளைகளே உடைந்து விடுவதுண்டு. சாதாரணமாக ஒரு பழத்தின் எடை 4 கிலோ வரை இருக்கும். ஆண்டுக்கு இருமுறை காய்க்கும் திறன் கொண்டவை இவை.

இத்தகைய மரங்களை நாற்றாக நட்டதிலிருந்து பலன் தருவதற்கு 17 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் என்பதாலேயே பெரும்பாலானோர் இவற்றை வளர்க்க ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால், இப்பழத்திற்கான தேவையைக் கருத்தில் கொண்டு மலேசியா மற்றும் தாய்லாந்து நாடுகளிலிருந்து இப்பழத்தை இறக்குமதி செய்து பயன்படுத்துகின்றனர். இப்பழத்தின் சிறப்புக்காகவே ஆண்டுதோறும் மே மாதத்தின் முதல் வாரத்தில் தாய்லாந்தில் "சர்வதேச துரியன் பழ தினம்" அனுசரிக்கப்படுகிறது.

இலங்கையில் இப்பழத்தின் சுளைகளை மட்டுமே பயன்படுத்துகின்றனர். ஆனால், மலேசியா போன்ற நாடுகளில் இதன் இலை முதல் தோல் உள்ளிட்ட அனைத்து பகுதிகளையுமே பயன்படுத்துகின்றனர். இலையைக் காய்ச்சி எடுக்கப்படும் வடிநீர், காய்ச்சல் நிவாரணியாகவும், மஞ்சள் காமாலை நோய்க்கு மருந்தாகவும், பழத்தின் சாறு ரொனிக்காகவும், தோல் பகுதிகள் தோல் நோய்க்கு மருந்தாகவும் பயன்படுகின்றன.

ஒரு கொசுறு தகவல்:

புனுகின் மணம் வெளிநாடுகளில் வசிக்கும் பலருக்கும் பிடிக்காத ஒன்று என்பதால் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இப்பழம் பொது இடங்களில் விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# நிம்மதியாக வாழ விடுங்கள்!

**- மயிலை மயில்சாமி**
**சென்னையிலிருந்து எழுதுகிறார்:**



**இ**லங்கையில் நடக்கும் காமன்வெல்த் மாநாட்டில், இந்தியா பங்கேற்கக் கூடாது என, பிரதமருக்கு முதல்வர் கடிதம் எழுதியுள்ளது வருத்தத்துக்குரியது. அக்கடிதத்தில், கனடாவை உதாரணமாகக் காட்டியிருப்பதும் பொருத்தமற்றது. கனடாவின் இலட்சணத்தைப் பார்ப்போம்... கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு, கனடா தான் முதலில் உதவி செய்தது. ஆனால், அணுசக்தி விஸ்தரிப்புத் தடுப்பு ஒப்பந்தத்தில் நம் நாடு கையெழுத்திட மறுத்ததோடு, பொக்ரானில் அணுப் பரிசோதனையும் செய்ததால், அமெரிக்காவின் தூண்டுதலால் கனடா அத்திட்டத்துக்கான உதவியை நிறுத்தி விட்டது. அமெரிக்காவின் மிரட்டலுக்கு பணிந்து, நம் நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்த நாடுகளில் கனடாவும் ஒன்று. இந்த வரலாறு, பாமரர்களுக்கும் இளைஞர்களுக்கும் தெரியாமல் இருக்கலாம் முதல்வருக்குமா தெரியாது?

நம்பியவர்களை நட்டாற்றில் விடும், கனடாவையா நாம் பின்பற்ற வேண்டும்?

"ஒருங்கிணைந்த இலங்கைக்குள், எங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண விரும்புகிறோம்" என, வடக்கு மாகாண முதல்வரும் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவருமான விக்னேஸ்வரன் கூறுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கு, இலங்கைத் தமிழர்கள் மட்டுமின்றி நம் மத்திய - மாநில அரசுகளும், இலங்கை அரசோடு இணக்கமாகச் செயல்படத் தான் வேண்டும். மோதல் போக்கை நாம் தொடர்ந்து கடைபிடித்தால், இலங்கை அரசின் மனப்பாங்கு இறுகி விடும் அபாயம் உள்ளது.

இது ஒரு புறமிருக்க, "அரசியல் நோக்கத்துடன் தான் தமிழக அரசியல்வாதிகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையை கையில் எடுக்கின்றனர்; தமிழக அரசியல்வாதிகள், தனி ஈழம் பற்றி பேசுவதால், எங்களுக்குத் தான் பாதகம் உண்டாகும்" என்றும், விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

"சார்க்" அமைப்பின் சார்பில், இலங்கைத் தேர்தலைக் கண்காணித்த குழு, "தேர்தல் அமைதியாக நடந்தது, தேர்தல் நாளன்று எந்த விதமான அசம்பாவிதமோ வன்முறையோ நிகழவில்லை" என்று கூறியுள்ளது. இது, இலங்கைத் தமிழர்களின் ஜனநாயக உணர்வுக்குச் சான்று. ஆனால், விடுதலைப் புலிகளின் நிரந்தரப் பிரதிநிதி வைகோ, "வடக்கு மாகாணத்தேர்தல் இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச் சதி" என்கிறார். அமோக வெற்றி பெற்றது விடுதலைப் புலிகள் உருவாக்கிய அணி; படுதோல்வி கண்டது ராஜபக்ஷ ஆதரவு அணி. தன் ஆதரவாளர்கள் தோற்க வேண்டும் என்றா, ஒருவர் சதி செய்வார்? தனி ஈழம் குறித்து பொது வாக்கெடுப்புக்கு விக்னேஸ்வரன் ஏற்பாடு செய்வாரா என்று, ஒரு தமிழினக் காவலர் கேட்கிறார்; தேர்தல் என்பதே வாக்கெடுப்பு தானே! நரி, வலம் போனாலும், இடம் போனாலும், மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் அது தான் மிகச்சிறந்த சகுனம் என்பர். இலங்கைத் தமிழர் மீது விழுந்து பிடுங்காதீர்கள்... அவர்களை, நிம்மதியாக வாழவிடுங்கள்!

(தினமலர் பத்திரிகையில்)

# "ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" கலந்துரையாடல்

— சுரேஷ் கண்ணன் —

"**எ**னது சிதை எரியும் வெப்பத்தின் வெம்மையில் நீங்கள் குளிர்காயுங்கள்"

என்கிற அதிரடியான வாக்கியத்துடன் தனது உரையைத் துவங்கினார் மிஷ்கின். "ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" திரைப்படத்தையொட்டி பவாசெல்லத்துரை அவர்கள் ஒழுங்கு செய்திருந்த கலந்துரையாடலில் இது நிகழ்ந்தது. "நந்தலாலா" வை நீங்கள்தான் கொன்றீர்கள் என்று விமர்சகர்களின் மீது அவர் வைத்த குற்றச்சாட்டையொட்டி வெளிப்பட்டதுதான் முதல் வாக்கியம்.

"ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" பற்றி சொல்கையில் "இதை திருட்டு டிவிடியில் கூட பாருங்கள். ஒன்றும் பிரச்சினையில்லை. ஆனால் பிறகு திரையரங்கிற்கு வருவீர்கள்" என்கிற அவரின் நையாண்டியில் உறைந்திருந்த திமிர் ரசிக்கத்தக்கதாக இருந்தது. ஆவேசமான உரை யாடலில் வெளிப்பட்ட அவரது குழந்தைத் தனமான உடல் மொழி ரசிக்கத் தக்கதாக இருந்தது. ஒரு நல்ல நடிகருக்கான அடையாளங்கள் அவரின் உடல்மொழியில் இயல்பாக வெளிப்பட்டன.

வேறு ஒரு சிறந்த இயக்குநர் ஒருவர் மிஷ்கினை கச்சிதமாக உபயோகப்படுத்தினால் அது மறக்க முடியாத திரைப்படமாக, கலைச்சாதனையாக இருக்க முடியும் என்பது என் நம்பிக்கை. கொடூரத்தன்மை உறைந்திருக்கும் நகைச்சுவை வில்லன் பாத்திரத்திற்கு மிஷ்கின் சிறப்பாக பொருந்தி வருவார் என்பது என் அவதானிப்பு. One Flew Over the Cuckoo's Nest (1975) திரைப்படத்தின் ஜாக் நிக்கல்சன் பாத்திரம் போன்றதொன்றை மிஷ்கின் சிறப்பாக செய்ய முடியும் என கருதுகிறேன்.

அவர் பேச்சின் இறுதியில் குறிப்பிட்ட ஒரு விஷயம் நெருடிக் கொண்டேயிருந்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"திருநங்கைகளை" இனி அவ்வாறு அழைக்காதீர்கள்... அவர்கள் தங்களை பெண்களாகத்தான் உணர்கிறார்கள். எனவே அவர்களை பெண்கள் என்றே அழையுங்கள்" என்பதுதான் அது. மேடையில் இருந்த திருநங்கை ஏஞ்சல் கிளாடியும் ("ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" படத்தில் நடித்தவர்) இதை வரவேற்கும் விதமாக கைத்தட்டி மகிழ்ந்தார். அவர்களை வித்தியாசமாக அடையாளப்படுத்தி தனிமைப்படுத்த வேண்டாம் என்பதுதான் மிஷ்கின் சொன்னதின் உள்ளர்த்தமாக புரிந்து கொள்கிறேன்.




திருநங்கைகள், தங்களை பெண்களாக உணர்ந்து தங்களின் அடையாளத்தையும் உடலையும் கூட அவ்வாறே மாற்றிக் கொள்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் ஒன்பது, அலி.. என்று கொச்சையாயும் கேலியாகவும் அழைக்கப்பட்ட அடையாள விளித்தல்கள், மிகுந்த போராட்டத்திற்குப் பின் "அரவாணி"யாகி தற்போது "திருநங்கை"யாகி உள்ளது. விண்ணப்பப் படிவங்களிலும் ஆண், பெண் என்கிற வகைகளைத் தாண்டி மூன்றாம் பாலினத்தை குறிப்பிடுவதற்கான முறையீடுகளும் தொடர்கின்றன. மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு அடைந்திருக்கும் இந்த அடையாளத்தை இழப்பதற்கு திருநங்கைகள் சம்மதிப்பார்களா? மிஷ்கினின் வேண்டுகோள் உணர்வு பூர்வமானதான நோக்கில் சரியாக இருந்தாலும் நடைமுறைக்கு பொருத்தமல்லாமல் முரணாக இருப்பதாக தோன்றுகிறது.

இன்னொன்று, ஏஞ்சல் கிளாடி உரையாடின போது சொன்னது: "எந்தவொரு சபையிலும் நாங்கள் நுழையும் போது எவருமே வித்தியாசமாகவோ விநோதமாகவோ பார்க்காமல் சகஜமாக என்று பார்க்கிறார்களோ, அன்றுதான் திருநங்கைகள் தங்களின் அங்கீகாரத்தை உணர்ந்ததாக நான் கருதுவேன்" என்று லிவிங் ஸ்மைல் வித்யா அடிக்கடி கூறுவாராம். மிஷ்கின் கலந்துரையாடல் கூட்டத்திலும் ஏஞ்சல் கிளாடி அவர்களை சபை அப்படித் தான் அணுகியது என்று கருதுகிறேன். அவரும் அதை தன் உரையாடலில் உறுதிப்படுத்தின நினைவு.

ஒரு கூட்டத்தில் ஏற்பட்டிருக்கும் நல்ல மாற்றத்திற்கான இந்த அடையாளம், பொது வெளியிலும் நீடிக்க வேண்டும்.

# இறந்த பிறகு பேஸ்புக் அக்கவுண்ட் என்னவாகும்?




ஒருவர் இறந்த பின்னர், அவரின் ஜிமெயில் அக்கவுண்ட்டினைத் தொடர்ந்து பாதுகாத்து இயக்குவதற்கு, கூகுள் தரும் வழிகளை முன்னர் கண்டோம்.

அதே போல பேஸ்புக் அக்கவுண்ட்டினையும், தொடர்ந்து உயிர்ப்பில் வைக்க வழிகள் உண்டா? விடை இதோ!

பேஸ்புக் அக்கவுண்ட் வைத்துள்ள ஒருவர் இறந்த பின்னர், அவரின் அக்கவுண்ட்டிற்கு என்ன நேரிடுகிறது? பொதுவாக, இறந்தவரின் குடும்பத்தினர், அவரின் பேஸ்புக் அக்கவுண்ட், அவரின் புகைப்படம், அவர் பதித்த புகைப்படங்கள், தெரிவித்த தகவல்கள் என அனைத்தும், தொடர்ந்து உயிர்ப்புடன் இருக்கவே விரும்புவார்கள்.

பேஸ்புக், அக்கவுண்ட் ஒன்றை, அதற்கானவரின் மரணத்திற்குப் பின்னால், நினைவாக வைத்திருக்க வழி தருகிறது. இதனை memorialized அக்கவுண்ட் என அழைக்கிறது. இந்த வகை அக்கவுண்ட் வழக்கமான அக்கவுண்ட் போஸ்டிங்கிலிருந்து வேறுபட்டது. இந்த அக்கவுண்ட்டில் யாரும் லொக் இன் செய்திட முடியாது. புதியதாக எந்த ஒரு நண்பரின் வேண்டுகோளும் ஏற்றுக் கொள்ள இயலாது. இந்த அக்கவுண்ட்டில், அதனை உருவாக்கியவரின் தனிப்பட்ட செட்டிங்ஸ் பாதுகாக்கப்படும். எனவே, இறந்தவரின் அக்கவுண்ட்டிற்கு, அவருடைய நண்பர்கள், டைம்லைனில், தகவல்களைப் பதியலாம். குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், அதில் தங்கள் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளலாம். பிரைவேட் மெசேஜ எனப்படும் தனிப்பட்ட தகவல்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

இறந்தவர் பகிர்ந்து கொண்ட தகவல்கள் அப்படியே வைக்கப்படும். நண்பர்கள் அவற்றை எந்த நேரத்திலும் பார்க்கலாம்..

அக்கவுண்ட் ஒன்றை நினைவக அக்கவுண்ட்டாக அமைக்க>https://www.facebook.com/help/contact/305593649477238 என்ற முகவரியில் உள்ள விண்ணப்பத்தினை, இறந்தவர்களின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் நிரப்பி அனுப்பவும்.

இதில் கேட்டுள்ள இறப்பு சான்றிதழ்களையும் அனுப்ப வேண்டியிருக்கும். இல்லை எனில், நம் மக்கள் உயிரோடு இருக்கிறவர்களின் நெருங்கிய உறவினர் என பொய்யாக, விண்ணப்பத்தினை அனுப்பிவிடுவார்கள் இல்லையா!

# ஒரு மொபைலிலிருந்து மற்றொரு மொபைலுக்கு வீடியோக்களை நகர்த்த சில விநாடிகள் போதும்!

தினமும் நாம் வியக்கும் வண்ணம் பல டெக்னோலெஜி சம்பந்தப்பட்ட புதுப்புது தகவல்கள் வந்து கொண்டே தான் இருக்கிறது நாமும் அவற்றை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறோம். அந்த வகையில் முன்பு படங்கள், வீடியோக்களை ஒரு போனில் இருந்து வேறொரு போனுக்கு அனுப்ப கேபிள்களை பயன்படுத்தினர் பின்னர் புளூருத் பயன்படுத்தினர்.

தற்போது அதைவிட புதிய தொழில்நுட்பம வந்துவிட்டது. அதாவது இதில் நீங்கள் 100MB அளவுள்ள ஒரு வீடியோவை ஒரு மொபைலிலிருந்து மற்றொரு மொபைலுக்கு நகர்த்த சில விநாடிகளே ஆகும். இதற்காகவே பிரத்தியோகமான ரிங் மற்றும் பான்ட் ஆகியவை வந்துள்ளது. இதனைப்பயன்படுத்தி ஒரு சில விநாடிகளிலே இந்த வேலைகளை நாம் செய்து முடிக்கலாம். கையில் அணிந்திருக்கும் இந்த பான்ட் மூலம் போட்டோ களை நகர்த்தலாம். இந்த ஸ்டிக்கர் மூலம் URL ஐ கொப்பி செய்யலாம். இந்த ரிங் மூலம் வீடியோக்களை வேண்டிய இடத்திற்கு நகர்த்தலாம்.



கணினி உலா

# Retina திரையுடன் கூடிய iPad Mini

அப்பிள் நிறுவனமானது Retina திரையுடன் கூடிய iPad Mini சாதனத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

7.9 அங்குல அளவு, 2048 x 1536 Pixel Resolution cila தொடுதிரையினைக் கொண்டுள்ள இச்சாதனமானது அப்பிளின் புதிய 64-bit A7 Processor - இனை உள்ளடக்கியுள்ளது.

மேலும் இது அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட iOS 7 இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாகக் காணப்படுவதுடன் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 1.2 மெகாபிக்சல்களை உடைய துணைக் கமெரா போன்றவற்றினையும் கொண்டுள்ளது.

இதன் சேமிப்பு நினைவகமாக 16GB, 32GB 64GB மற்றும் 128GB கொள்ளளவு தரப்பட்டுள்ளது.

இவற்றின் ஆரம்ப விலையானது 399 அமெரிக்க டொலர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.







# கூகுள் பிளே ஸ்டோர் புதிய பதிப்பு!

அன்ரோயிட் இயங்குதளங்களில் பயன்படுத்தக்கூடிய மென்பொருட்கள் உட்பட கூகுள் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் சாதனங்களை கொள்வனவு செய்வதற்கு கூகுள் பிளே ஸ்டோர் பயன்படுத்தப்படுகின்றது.

தற்போது இத்தளத்திற்கான புதிய பதிப்பில் உருவான Google Play Store 4.4 அப்ளிக்கேஷன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அப்ளிக்கேஷன் ஆனது அடுத்தவாரம் அறிமுகப்படுத்தப் படவுள்ளGoogle Nexus 5 சாதனத்தில் உத்தியோக பூர்வமாக நிறுவப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

# கம்ப்யூட்டர் கிராஷ் (Computer Crash) ஆவது எதனால்?



கம்ப்யூட்டர் கிராஷ் ஆகி நீல வண்ணத்தில் திரை மாறிவிடும். அல்லது அப்படியே திரைக் காட்சி முடங்கிப் போய்விடும்.

சில வேளைகளில் திரையில் Fatal error: the system has become unstable or is busy," it says. "Enter to return to Windows or press ControlAltDelete to restart your computer. If you do this you will lose any unsaved information in all open applications." என்ற செய்தி கிடைக்கும்.

இதைத்தான் Blue Screen of Death என்று கம்ப்யூட்டர் மொழியில் சொல்வார்கள். ஏன் இவ்வாறு ஏற்படுகிறது என்று இங்கு காணலாம்.

**ஹார்ட்வேர் பிரச்சினை**

கம்ப்யூட்டரில் பல பாகங்கள் ஒன்றிணைந்து இயங்குகின்றன. சில வேளைகளில் இவற்றுக்குள் பிரச்சினை வந்தால் இயங்குவது நின்று போகும். ஒவ்வொரு சாதனமும் ஒரு வழியை மேற்கொண்டு அதன் மூலம் தன் இயக்கத்தை மேற்கொள்ளும். பொதுவாக ஒரு கம்ப்யூட்டரில் இத்தகைய வழிகள் குறைந்த பட்சம் 16 இருக்கும். இதில் ஒரே வழியை இரு சாதனங்கள் (பிரிண்டர், கீ போர்ட் ஃ மவுஸ்) எடுத்துக் கொள்ளும்போது இயக்கம் நின்று போகும். இவ்வாறு ஏற்படுகையில் Start => Settings => Control pannel => System => Device Manager எனச் சென்று பார்த்தால், பிரச்சினை ஏற்பட்ட சாதனத்தின் பெயர் முன்னால் ஒரு மஞ்சள் நிற ஆச்சரியக் குறி தோன்றும். டிவைஸ் மேனேஜரில் கம்ப்யூட்டர் என்பதில் கிளிக் செய்து பார்த்தால், இந்த சனல் வழிகளுக்கான ஐ.ஆர்.க்யூ எண் காட்டப்படும். ஒரே எண் இருமுறை இருப்பின் பிரச்சினை அங்குதான் உள்ளது என்று பொருள். இதற்குத் தீர்வு என்ன? பிரச்சினைக்குரிய சாதனத்தை அன் இன்ஸ்டோல் செய்து மீண்டும் இன்ஸ்டோல் செய்தால் போதும்.

**ராம் மெமரி சிப்ஸ்**

ராம் மெமரியை உயர்த்துவதற்காகப் புதிய ராம் சிப் ஒன்றை இணைத்திருப்போம். ஆனால் ஒன்றுக்கொன்று வேறுபாடான வேகம் உள்ளவையாக அவை இருக்கலாம். அவற்றிற்கிடையே இணைந்து செல்லும் நிலை ஏற்படாத போது Fatal Exception Error ஏற்படலாம். இதனை கம்ப்யூட்டர் பாகங்களின் இயக்கம் தெரிந்தவர்கள் மூலம், பயாஸ் செட்டிங்ஸ் திறந்து, ராம் wait state நிலையைச் சற்று உயர்த்தலாம். அல்லது ஒரே மாதிரியான வேகத்தில் இயங்கும் சிப்களை அமைக்கலாம்.

**ஹார்ட் டிஸ்க் டிரைவ்**

பயன்படுத்தத் தொடங்கிய சில வாரங்களில் ஹார்ட் டிஸ்க்கின் ஒழுங்கு நிலை கலையத் தொடங்கும். தேவையற்ற தற்காலிக பைல்கள் தேங்கும். பைல்கள் சிதறியபடி சேமிக்கப்படும். இதனால் இயக்க வேகத்திற்கு ஹார்ட் டிஸ்க் இணையாக இயங்க முடியாமல் போகும். அப்போது கிராஷ் ஆக வாய்ப்புண்டு. எனவே அடிக்கடி ஹார்ட் டிஸ்க்கினைச் சுத்தப்படுத்த வேண்டும். இதற்கு டிஃபிராக் செய்திட வேண்டும். சி-ட்ரைவில் தங்கும் தேவையற்ற பைல்களை அதற்கான புரோகிராம்கள் கொண்டு நீக்கலாம்.

**வீடியோ கார்ட்**

சில வேளைகளில் கிராஷ் ஆகும் போது Fatal OE exceptions and VXD errors என்ற செய்தி கிடைக்கும். இது வீடியோ கார்டினால் ஏற்படுவது. இதனைத் தவிர்க்க வீடியோ டிஸ்பிளேயின் ரெசல்யூசனைக் குறைக்கவும். StartSettingsControl PanelDisplay Settings எனச் சென்று ஸ்கிரீன் ஏரியா பாரினை இடது மூலையில் நிறுத்தவும். அதே போல கலர் செட்டிங்ஸ் சென்று 16 பிட் என்ற அளவில் அமைக்கவும்.

**வைரஸ்**

பெரும்பாலான கம்ப்யூட்டர் கிராஷ்களுக்கு வைரஸ்களே காரணம். சரியான அன்டி வைரஸ் புரோகிராம் ஒன்றை நிறுவி, அவ்வப்போது அதனை அப்டேட் செய்வது மட்டுமே இதனைத் தடுக்கும். பல வைரஸ்கள் பூட் செக்டாரைக் கெடுத்து வைக்கும். இதனால் கம்ப்யூட்டரை இயக்கவே முடியாது. எனவே இது போன்ற நிலையில் கை கொடுக்க விண்டோஸ் ஸ்டார்ட் அப் டிஸ்க் ஒன்றை உருவாக்கி கைவசம் வைத்துக் கொள்ளுங்கள்.

**பிரிண்டர்**

பல வேளைகளில் கம்ப்யூட்டர்கள் பிரிண்ட் எடுக்கையில் கிராஷ் ஆவதை நீங்கள் கவனித்திருக்கலாம். இதற்குக் காரணம் பிரிண்டர்களில் மிகவும் குறைந்த அளவில் பஃபர் மெமரி இருப்பதே ஆகும். மேலும் கம்ப்யூட்டரின் சிபியு சக்தியை பிரிண்டர்கள் சற்று அதிகமாகவே பயன்படுத்தும். எனவே பல வேலைகளுடன் பிரிண்டிங் வேலையை மேற்கொள்கையில், அல்லது அதிகமான அளவில் பிரிண்டருக்கு டேட்டாவினை அனுப்புகையில் கிராஷ் ஏற்படும். நாம் சாதாரணமாகக் காணாத கரக்டர்களை பிரிண்டர் அச்சிட்டால் இந்த பிரச்சினை தலை தூக்குகிறது. என்று பொருள். உடனே பிரிண்டருக்குச் செல்லும் மின்சாரத்தை 10 விநாடிகளுக்கு நிறுத்திப் பின் மீண்டும் இயக்கவும்.

**சொப்ட்வேர்**

முழுமையாக இல்லாமல் அல்லது மோசமாக இன்ஸ்டோல் செய்யப்பட்ட சொப்ட்வேர் தொகுப்புகளால், கம்ப்யூட்டர் கிராஷ் ஆகலாம். இவற்றைச் சரியாக அன் இன்ஸ்டோல் செய்திட வேண்டும். இல்லையேல் இவை தொடர்பான வரிகள், ரெஜிஸ்ட்ரியில் இருந்து கொண்டு, இந்த சொப்ட்வேரினை இயக்குகையில் கம்ப்யூட்டரை கிராஷ் ஆகும் நிலைக்குக் கொண்டுவரலாம். ரெஜிஸ்ட்ரியைச் சுத்தம் செய்திடவென வடிவமைக்கப்பட்ட புரோகிராம்களைக் கொண்டு அதனைச் சரி செய்திட வேண்டும். இல்லையேல் மீண்டும் விண்டோஸ் இயக்கத்தினை இன்ஸ்டோல் செய்திட வேண்டியதிருக்கும்.

**அதிக வெப்பம்**

இப்போது வருகின்ற சிபியுக்கள் மீது சிறிய மின் விசிறிகள் பொருத்தப்பட்டு சிபியு இயக்கத்தின் போது உருவாகும் வெப்பம் வெளிக்கடத்தப் படுகிறது. சிபியு அதிக சூடானாலும், அதிக குளிர்ச்சியினால் பாதிக்கப்பட்டாலும், கெர்னல் எர்ரர் (Kernel Error) என்று ஒரு பிரச்சினை ஏற்படும். பொதுவாக எந்த வேகத்தில் ஒரு சிபியு இயங்க வேண்டுமோ அதனைக் காட்டிலும் அதிக வேகத்தில் இயங்கும் வகையில், சிபியு செட் செய்யப்பட்டிருந்தாலும் அதிக வெப்ப பிரச்னை ஏற்படும். எனவே சிபியு வின் வேகத்தினை பயாஸ் செட்டிங்ஸ் சென்று குறைக்க வேண்டும்.

**மின் ஓட்டம்**

கம்ப்யூட்டருக்குச் செல்லும் மின் ஓட்டத்தினைச் சீராகத் தரும் சாதனங்களைக் கொண்டு தராவிட்டால், கிராஷ் ஆகும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.



காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட வாணிவிழாவில் க.சோமசேகரம் புத்தகம் வழங்கி கௌரவிப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (50)

# வடமராட்சி வடக்கு கலாசார பேரவையின் நாடக விழாவும் பரிசளிப்பு விழாவும்

(வடமராட்சி)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலில் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவையின் நாடக விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பரிவர்த்தன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை பேராசிரியர் நா. ஞானகுமரன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் என். ஸ்ரீதேவி, யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி மையத்தின் இயக்குநர் தே.தேவானந்த், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி சுந்தரேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் குமரன் மணந்த குறமகள் இசை நாடகம், மாலைக்கு வாதாடிய மைந்தன் சிந்து நடைகூத்து, துயர் களைவோம் என்ற சிறுவர் நாடகம், தோற்றுப் போவோம் சமூக நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (116, 109)

## மருத்துவப் பரிசோதனை

(நெடுங்கேணி)

ஒட்டுசுட்டான் இலவச ஆயுள் வேத மருத்துவமனையில் மருத்துவப்பரிசோதனைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன

ஒட்டுசுட்டான் இலவச ஆயுள் வேத மருத்துவமனையின் வைத்திய அதிகாரி மணிவண்ணன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை மு.ப 10.30மணியளவில் மருத்துவப்பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளன. இரத்தத்திலுள்ள சீனியின் அளவு. இரத்தத்திலுள்ள கொலஸ்ரரோலின் அளவு. இரத்தத்திலுள்ள ஈமோக்குளோபின் அளவு நீரிழிவு உள்ளிட்ட மருத்துவ பரிசோதனைகள் இலவசமாக மக்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளர் மிதிலைநாதர், வவுனியா மாவட்ட ஆயுள்வேத இணைப்பாளர் வைத்திய கலாநிதி சர்வானந்தா, வவுனியா மாவட்ட ஆயுள்வேத அத்தியட்சகர் வைத்திய கலாநிதி சுமதி, ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் தில்லையம்பலம், ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி, ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் தி.திரேஸ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (40)

## நீதிமன்றச் செய்திகள்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியில் சட்டவிரோதமாக மரங்களை தறித்துக் கொண்டிருந்த வேளையில் கைது செய்யப்பட்ட நால்வரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட பெருமளவு மரங்களையும் உபகரணங்களையும் பொலிஸார் நீதிமன்றில் பாரப்படுத்தி உள்ளனர்

□ □ □

ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பகுதிகளில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதுடன் கசிப்பு உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் உபகரணங்களை வைத்திருந்த மூவருக்கு ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

பெருமளவு கசிப்பு மற்றும் உபகரணங்களை அழித்து விடுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

□ □ □

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை குற்றமுறையாக கையாடியதாக குற்றஞ்சாட்டப்பட்டு பல மாதங்களாக தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் ஒருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் பாரப்படுத்தியுள்ளனர்.

பிடியாணை மூலம் கைது செய்யப்பட்ட இச் சந்தேகநபரை 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (170)

# மகனை பார்க்க துடிக்கும் மனநிலை குணமான தாய்

(திருநெல்வேலி)

மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த பத்து வருடங்களாகத் தங்கி வாழ்ந்து வந்த முதிய பெண்ணொருவர் தற்போது ஓரளவு மனநிலை தெளிந்த நிலையில் தான் பெற்றெடுத்த ஒரே ஒரு மகனைப் பார்க்கவேண்டும் எனத் தாய்ப் பாசத்தினால் துடிக்கின்றார்.

பூலேந்திரன் தவபூசணம் (வயது-61) என்னும் நெல்லியடி வதிரி என்னும் இடத்தைச் சேர்ந்தவரே இவ் முதிய பெண்ணாவார்.

இவர் திருமணம் முடித்து சில வருடங்களில் இவரது கணவர் விபத்து ஒன்றில் மரணமடைந்திருந்தார். விமல் என்னும் மகன் இவருக்குப்பிறந்து ஒரு மாதம் கழிந்த நிலையில் இவர் மனநலம் பாதிக்கப்பட்டு வீட்டை விட்டு வெளியேறினார். பல இடங்களிலும் அலைந்து திரிந்த இவரை சிலர் கைதடி முதியோர் இல்லத்தில் இணைத்துவிட்டனர். இவருக்கு சிகிச்சை இடம்பெற்று வந்தது.

தற்போது இவர் சற்றுக் குணமடைந்த நிலையில் தனது குடும்பத்தவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறுகின்றார். இல்லத்தில் இவரைப் பார்ப்பதற்காக வந்த உறவினரிடம் இவர் சிலரது பெயர்களைக் குறிப்பிட்டபோது அவைசரியாக இருப்பதை உறவினரும் உறுதிப்படுத்தினர்.

இதன்போது தனக்கு விமல் என்னும் ஒரு மகன் பிறந்ததாகவும், அவரைப் பார்க்க வேண்டும். எனவும் தெரிவித்துள்ளார். இம் மூதாட்டி தனது மகன் எனக் குறிப்பிடும் விமல் என்பவர் தற்போது லண்டனில் பொறியியலாளராக இருப்பதாகவும், அவர் திருமணமாகி ஒரு பிள்ளைக்குத் தகப்பனாக மனைவியுடன் அங்கு வாழ்வதாகவும் உறவினர்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

தான் பெற்ற தனது ஒரே மகனைப் பார்த்து விடவேண்டும் என இம் மூதாட்டி தற்போது தாய்ப்பாசம் மேலிட்ட நிலையில் தனது இறுதிக்காலத்தில் துடியாய் துடித்துக்கொண்டிருக்கின்றார். இவரது பாசத்தை உணர்ந்த இல்ல அத்தியட்சகர்களும் உத்தியோகத்தர்களும் இதற்கான முயற்சிக்களை மேற்கொண்டுள்ளனர். (137)

# பதிவிருக்கப் பெட்டகம்

அமிதவ் கோஷின் முதல் நாவல் The Circle of Reason 1985இல் வெளிவந்தது. சீக்கியர்கள் மீதான வன்முறைக்கு அடுத்த ஆண்டு. இது குறித்து அவர் சமீபத்தில், 1984 சம்பவங்கள்தான் தன் நாவலுக்குத் தூண்டு பொறியாய் அமைந்ததாகக் கூறியுள்ளார். “எனது வாழ்க்கை எவ்வாறு கலவரங்கள் என்கிற வலையால் சூழப்பட்டுள்ளது என்பதைத்தான் 1984 எனக்குச் சுட்டிக் காட்டியது” என்றுள்ளார். யோசித்துப் பார்த்தால் நாம் எல்லோருமே இப்படியான வலைப்பின்னலுக்குள்தான் சிக்கி வாழ்ந்து கொண்டுள்ளோம். இப்படியான வன்முறைகள், வெறுப்பு அரசியல், மற்றமை மீதான வன் கொடுமைகள், ‘அந்நியர்’ குறித்த வித விதமான வரையறைகள் நம்மைச் சுற்றி நடைபெற்றுக் கொண்டுள்ளன. அவற்றுக்குள்தான் நாம் வாழ்ந்துகொண்டுள்ளோம். தமிழ் எழுத்துக்கள் எந்த அளவிற்கு இவை குறித்த பிரக்ஞையை வெளிப்படுத்துகின்றன? மாறாக மிக வெளிப்படையாகவும் வெட்கமில்லாமலும் மற்றமைகள் மீதும், சிறுபான்மையினர் மீதும் வெறுப்பை விதைக்கும் இயக்கங்களோடும் சிலர் தம் எழுத்தை அடையாளப்படுத்தப்படும் சூழல் தமிழில் உருவாகி வருவது எதைக் காட்டுகிறது? – அ.மார்க்ஸ்

இந்திய உப கண்டத்தில் நிலவும், சாதி ஒடுக்குமுறைக்கும், ஐரோப்பிய பாசிசத்திற்கும் இடையில் ஏதாவது ஒரு தொடர்பு இருக்க வேண்டும். எரித்திரியா ஒரு காலத்தில் இத்தாலியின் காலனியாக இருந்தது. இத்தாலியில் முசோலினி தலைமையிலான பாசிஸ்டுகள் அதிகாரத்திற்கு வந்த பின்னர், ஆபிரிக்க காலனியுடனான உறவிலும் மாற்றம் வந்தது. எரித்திரியாவினை நிர்வகித்துக் கொண்டிருந்த சில ஆயிரம் இத்தாலியர்களின் நடத்தையிலும் மாற்றம் ஏற்பட்டது. தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் (Apartheid) கொள்கை நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே, அது எரித்திரியாவில் இருந்துள்ளது. இத்தாலி பாசிஸ்டுகள், எரித்திரியர்களை எந்தளவுக்கு கீழ்த் தரமாக நடத்தினார்கள் என்பதற்கு சில உதாரணங்களை தருகிறேன்.

வயதால் பெரிய எரித்திரியராக இருந்தாலும், வெள்ளையர்கள் அவரை “நீ” என்று ஒருமையில் அழைப்பார்கள். அதே நேரம் வெள்ளையின சிறுவனைக் கூட, எரித்திரியர்கள் “ஐயா” என்று அழைக்க வேண்டும். தெருவில் தனியாக ஒரு வெள்ளையர் நடந்து சென்றால், அவரருகில் எரித்திரியர்கள் நடந்து செல்ல முடியாது. இரண்டு, மூன்று அடிகள் பின்னால் நடந்து வர வேண்டும். எரித்திரியர்கள் தெருவைக் கடக்கும் நேரம், தூரத்தில் ஒரு வெள்ளையர் வந்தாலும், அவர் போகும் வரையில் காத்திருந்து தான் கடக்க வேண்டும்.

இத்தாலி பாசிஸ்டுகளின் நிறவெறியினால் பாதிக்கப்பட்ட எரித்திரியர்கள், இரண்டாம் உலகப்போரில் இத்தாலிப் படைகளை தோற்கடித்த, பிரிட்டிஷ் இராணுவத்தை வரவேற்றதில் வியப்பில்லை. பிரிட்டிஷ் இராணுவ தளபதியை சந்திக்க நேர்ந்த, எரித்திரிய மூதாட்டி ஒருவர், “விடுதலை செய்ததற்கு நன்றி” கூறினார். அப்போது அந்த ஆங்கிலேய தளபதி: “நான் உனக்காக இதைச் செய்யவில்லை, கறுப்பியே!” என்று பதிலளித்தார். எந்தவொரு மேற்கத்திய நாடும், எதையும் எமக்காக செய்வதில்லை. இன்றைக்கும் அது தான் யதார்த்தம். – கலையரசன்

குண்டுகள் சாதி, பால்நிலை, மதம் பார்த்து விழவில்லை. எல்லோர் மேலும் தான் குண்டுகள் விழுந்தன. சாவு சதா எங்கள் கதவுகளைத் தட்டிக்கொண்டிருந்த காலகட்டத்தில், புலிகள் முதலில் இனரீதியான வெற்றியைப் பெற்றுவிட்டு மற்றவற்றைப் பார்க்கலாம் என நம்பினார்கள். துவக்குகள் தூக்க பலம் பெற்றிருந்த நாங்கள், விமர்சனங்களை எதிர்கொள்ளும் பலமற்றிருந்தோம். அதனாலேயே, இஸ்லாம் சமூகத்தினரை, இனசமத்துவத்தில் நம்பிக்கையோடு இருந்த சிங்கள அறிவுஜீவிகளை, பிராந்திய அரசியல் நேச சக்திகளை, சர்வதேச சமூகங்களை என எல்லோரையும் எதிர்நிலையில் நிறுத்தினோம். தன்னைத் தவிர யாரையும் நேசிக்காத விடுதலை இயக்கத்தால், கொத்து கொத்தாக மக்களைக் காவு கொடுத்தோம். இராணுவபலம் மட்டுமே தமிழர்களுக்கு தேசம் வென்று தரும் என்பது பொய்த்துப் போனது. இன்று தொடங்கிய இடத்திலேயே நிற்கிறோம். – கருணாகரன்

# வெளியுறவுக் கொள்கையில் மறுசீரமைப்பு வேண்டும்

## ஐ.தே.கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வெளியுறவுக்கொள்கையை மறுசீரமைப்பதன் மூலமே சர்வதேச அளவில் நாடு நல்ல பெயரை சம்பாதிக்க முடியும். பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களை நன்றாகக் கவனித்து அவர்களை சந்தோசப்படுத்துவதன் மூலம் அந்த நாடுகளின் நன்மதிப்பை பெற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

'உரிய முறையில் வெளியுறவுக் கொள்கைகள் பேணப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் குறித்த செலவுகளை அரசாங்கம் அம்பலப்படுத்தவில்லை அமர்வுகளுக்காக எவ்வளவு தொகை செலவிடப்படவுள்ளது என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

செலவுகள் குறித்த தகவல்களை வெளியிடுமாறு பல தடவைகள் கோரிய போதிலும் அரசாங்கம் அதனை மூடி மறைத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அமர்வுகளில் பங்கேற்பது குறித்து இதுவரையில் தீர்மானிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் இந்த விடயம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து தலைவர்களும் அமர்வுகளில் பங்கேற்பதனை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# கொழுப்பு மாநாட்டில் காம்பியா பங்கேற்காது

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் காம்பியா பங்கேற்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் ஆபிரிக்க நாடான காம்பியா பங்கேற்காது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நாடு பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து விலகிக் கொள்ளத் தீர்மானித்துள்ளது.

எனவே, எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள அமர்வுகளில் பங்கேற்கப் போவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரித்தானிய காலணித்துவ நாடான காம்பியா கடந்த மாதம் உறுப்புரிமையை வாபஸ் பெற்றுக்கொள்ளப் போவதாக அறிவித்திருந்தது.

1965ஆம் ஆண்டு காம்பியா பொதுநலவாய நாடுகள் அமைப்பில் உறுப்புரிமை பெற்றுக்கொண்டிருந்தது.இதன்படி, பொது நலவாய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளின் மொத்த எண்ணிக்கை 54 இலிருந்து 53 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

# கட்டுநாயக்கா அதிவேக சாலை இன்று உத்தியோகபூர்வமாக திறப்பு

(கொழும்பு)

கொழும்புக்கும் கட்டுநாயக்காவுக்குமிடையிலான அதிவேக நெடுஞ்சாலை இன்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்கா - கொழும்பு அதிவேக வீதியில் தனியார் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்கும் தினம் தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

காலி - கொழும்பு அதிவேக வீதி மற்றும் கட்டுநாயக்கா - கொழும்பு அதிவேக வீதியில் தனியார் பேருந்து சேவையை ஆரம்பிப்பது குறித்து கேள்விமனுக்கோரல் நிறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கட்டுநாயக்கா - கொழும்பு அதிவேக வீதியில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவைகள் நாளை முதல் சேவையில் ஈடுபடவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் உபதலைவர் எல்.ஏ. விமலரத்ன தெரிவித்தார். கட்டுநாயக்கா - கொழும்பு அதிவேக வீதி இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

# யுத்தத்துக்குப் பிந்திய நல்லிணக்கம் தென்னாபிரிக்காவிடம் பாடம் கற்கலாம்

(கொழும்பு)

யுத்தத்துக்குப்பிந்திய நல்லிணக்கத்தை எப்படி ஏற்படுத்துவது என்று தென்னாபிரிக்காவிடம் கற்றுக்கொள்ளமுடியும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு மன்றக்கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நல்லிணக்கம் தொடர்பான தென்னாபிரிக்க - இலங்கை கூட்டு கலந்துரையாடல் ஒன்றின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

பிரச்சினைகளுக்கு பின்னர் தென்னாபிரிக்க நல்லிணக்கத்தின் மூலம் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது.

இந்த படிப்பினை இலங்கையின் எதிர்கால கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் உதவும் என்றும் அமைச்சர் கூறினார்.

எனினும் ஒரு நாட்டின் கொள்கையை அப்படியே பிரதியெடுக்க வேண்டிய அவசியம் மற்றும் ஒரு நாட்டுக்கு இல்லை.

ஏனெனில் ஒவ்வொரு நாடும் தமக்கு எது சிறந்த வழியென்று புரிந்துகொள்ள முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# காயமடைந்த படையினருக்கு இதுவரை 130 மில்லியன் நட்டஈடு

(கொழும்பு)

யுத்தகாலத்தில் காயமடைந்த படைவீர்ர்களுக்கு நட்ட ஈடுவழங்குவதற்கு அரசு இதுவரை 130 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. கடந்த எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்து படையினர் புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுத்து வந்தனர்.1980ஆம் ஆண்டு முதல் யுத்தம் முடிவடையும் காலப்பகுதி வரை வடக்கு , கிழக்கில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளால் படைகளைச் சேர்ந்த 28,158 பேர் உயிரிழந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக் கான வினாவின் போது ஐ.தே.க. எம்.பி. புத்திக பத்திரன எழுப்பிய கேள்விக்கு அளித்த பதிலிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவுக்கு வரும் வரை வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்ற புலிகளின் செயற்பாடுகளினால் முப்படைகளையும் சேர்ந்த 24,992 பேரும்,பொலிஸ் படையில் 2,159 பேரும், விசேட அதிரடிப் படையில் 462 பேரும் சிவில் பாதுகாப்புப் படையில் 545 பேருமாக மொத்தம் 28,158 பேர் உயிரிழந்துள்ளனர்.தற்போது கூட இராணுவ வைத்தியசாலைகளில் நிகரான இடங்களிலும் 357 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேவேளை போரில் அங்கவீனமுற்ற படைவீரர்களுக்காக இதுவரை 92.39 மில்லியன் ரூபா நஷ்ட ஈடாக செலுத்தப்பட்டுள்ளது. 1971 மற்றும் 1988, 1989 காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட கிளர்ச்சிகளின் காரணமாக மேற்படி படைப்பிரிவுகளைச் சேர்ந்த 883 பேர் உயிரிழந்துள்ளனர்.

இக்காலப்பகுதியில் 320 பேர் அங்கவீனமாகினர். இவர்களுக்கு நஷ்ட ஈடாக 37.97 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

# படையினரின் பாலியல் தொல்லை இராணுவப்பேச்சாளர் மறுப்பு

## பரபரப்புத் தகவலை வெளியிட்டது பி.பி.சி.

விடுதலைப் புலிகளின் முன்னாள் பெண் போராளிகள் இராணுவத்தினரால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளதாகவும் பாலியல் வல்லுறவு அச்சுறுத்தல்களை அவர்கள் எதிர்நோக்கியிருப்பதாகவும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை இராணுவம் வழமைபோல மறுத்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு நேரடியாகச் சென்றிருந்த பி.பி.சியின் செய்தியாளர் பர்கல் கீன் வெளியிட்ட தொலைக்காட்சி செய்திப் பெட்டகத்தில் பேசிய முன்னாள் பெண் போராளி ஒருவர் தான் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளானதாகவும், இராணுவத்தினரிடம் சிக்கினால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படலாம் என்று அஞ்சிக் கொண்டிருப்பதாகவும் கூறியிருந்தார்.

அதுகுறித்து பி.பி.சி எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்துள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய,

பி.பி.சியின் செய்திகளில் உண்மை இல்லை என்று கூறினார்."பி.பி.சியில் இதற்கு முன்னர் வெளியான செய்தியொன் றில் 75 பேர் இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானதாக கூறப்பட்டிருந்தது. அப்போதே அதில் உண்மை எதுவும் இல்லை என்று மறுத்திருந்தோம்.

அதேபோலத் தான் இப்போதும். பி.பி.சியாகட்டும் வேறு ஊடகங்களாக இருக்கட்டும் துரதிஸ்டவசமாக அனேகமான சந்தர்ப்பங்களில் முகம் காட்டாத பெயர் இல்லாத நபர்களைத் தான் காட்டுகிறார்கள்.

முகம் இல்லாத, பெயர் இல்லாத இப்படியான நபர்கள் கூறுகின்ற இவ்வாறான குற்றச்சாட்டுக்களை நாங்கள் நிராகரிக்கின்றோம்" என்றார் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய.வடக்கில் கடந்த 4 ஆண்டுகளில் இராணுவத்தினரால் நடந்ததாகக் கூறப்படும் 11 சம்பவங்கள் தொடர்பில் இராணுவ சட்டத்தின் கீழே சட்ட நடிவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டனைகளும் அளிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் கூறினார்.இதேவேளை, ஹெய்ட்டியில் ஐ.நா.அமைதிகாக்கும் படையினராக செயற்படும் இலங்கை இராணுவத்தின் சிப்பாய் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில் அவர் பற்றிய விசாரணைகளை தமது இராணுவ விசாரணை மன்றமொன்று ஆரம்பித்துள்ளதாகவும் இலங்கை இராணுவப் பேச்சாளர் பி.பி.சியிடம் உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# வேண்டாத விருந்தாளிகளுடன் இரகசியச்சந்திப்புக்கள் ஏன்?

## ஆளும் கட்சிக்குள் புகைச்சல்

(கொழும்பு)

அரசுக்கு வேண்டப்படாத தரப்புக்களுடன் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் இரகசியச்சந்திப்புகளில் ஈடுபட்டு வருவதாக ஆளும் கட்சியின் உறுப்பினர்களிடையே முறுகல் நிலை தோன்றியிருப்பதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று பரபரப்புத்தகவல் வெளியிட்டிருக்கிறது.ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் சில தரப்பினருடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் சில பிரதேச சபை உறுப்பினர்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இரகசிய சந்திப்பிற்கான காரணம் என்ன என்பது குறித்து விசாரணை செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

கட்சியின் தலைமைத்துவத்திடம் அனுமதியின்றி இரகசியமாக இவ்வாறான கூட்டங்களை எதிர்காலத்தில் நடத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# பொலிஸ் நிலையங்களில் அதிகரிக்கும் அரசியல் தலையீடு

## மக்களுக்கு நியாயம் கிட்டுவது எப்போது? சஜித் எம்.பி.கேள்விக்கணை

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அடிப்படையாக கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேதமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கேள்விக்கணை எழுப்பியுள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசாங்கம் எப்போது ஸ்தாபிக்கப் போகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் வினவியுள்ளார்.

பொலிஸ் நிலையங்கள் அரசியல் மயமாக்கப்படுகின்றதால் மக்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை எனத் தெரிவித்த சஜித் பிரேமதாஸ பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் பிரதி தலைவர்கள் சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டார்.


இந்த நிலையில் பொலிஸ் நிலையங்கள் சுயாதீனமாக செயற்படுவதற்கான சூழல் எப்போது உருவாகும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஸ் குணவர்தன, பொலிஸ் ஆணைக் குழுவை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

27.  உருவில் உள்ள சிறுவன் பயணம் செய்வது மாலை வேளையில் எனின் சிறுவன் செல்லும் திசை யாது?
1. தெற்கு 2. மேற்கு 3. கிழக்கு


28. விபுலன் ஒரு ஆண்பிள்ளை விபுலனின் தம்பிக்கு இரண்டு சகோதரிகளும். இரண்டு சகோதரர்களும் உள்ளனர். எனின் விபுலனுக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?
1. 1 2. 2 3. 3

29.  கடிகார முகத்தில் உள்ள மணித்தியால முள் அமைந்துள்ள முறைக்கு ஏற்ப நிமிடமுள் இருக்க வேண்டிய இலக்கமாவது?
1. 6இல் 2. 12இல் 3. 10இல்

30. 6 லீற்றர் எண்ணெய் 10 சிறிய போத்தல்களில் அடைக்கப்பட்டால் ஒரு போத்தலில் உள்ள எண்ணெய்யின் அளவு யாது?
1. 6.0$l$ 2. 10.0$l$ 3. 0.6$l$

❖ **உருவில் A,B,C,D நகரங்களுக்கிடையிலான தூரங்கள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது.**

நகரம் A இல் இருந்து B நகரத்துக்கான தூரமும், நகரம் C யில் இருந்து நகரம் D க்கான தூரமும் சமனாகும். நகரம் B யிலிருந்து நகரம் C க்கானதூரம் A.B நகரங்களுக்கிடையிலான தூரத்தின் $\frac{1}{3}$ பங்காகும் நகரம் A யில் இருந்து B க்கான தூரம் 27km ஆகும்.




31. நகரம் B இல் இருந்து C க்கான தூரம் யாது? ....................

32. நகரம் A இல் இருந்து B,C ஊடாக D க்கான தூரம் யாது? ....................

33. வாகனம் ஒன்று 1லீற்றர் பெற்றோலில் 9km தூரம் பயணம் செய்யும் எனின் அவ்வாகனம் நகரம் A யில் இருந்து D வரை பயணம் செய்ய தேவையான பெற்றோலின் அளவு யாது? ....................

❖ **கீழுள்ள சட்டகத்தை அவதானித்து 34ஆம், 35ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| B | T | L | X | M |
| S | P | G | A | U |
| C | R | K | I | H |
| J | O | W | Z | D |
| Y | E | V | F | N |

34. இச்சட்டத்தில் மேலிருந்து கீழாக நான்காவது வரிசையில் இடமிருந்து வலமாக ஐந்தாவது பெட்டியில் உள்ள எழுத்து எது? ....................

35. இச்சட்டத்தில் கீழிருந்து மேலாக ஐந்தாவது வரிசையில் வலமிருந்து இடமாக மூன்றாவது பெட்டியில் உள்ள எழுத்து எது? ....................

36. கை, பூ, இலை, கண் போன்ற சொற்கள்
1. சினைப்பெயர்கள் 2. குணப்பெயர்கள் 3. பொருட்பெயர்கள்

37. எனது தாயின் சகோதரனின் தாயின் கணவன் எனது தாய்க்கு என்ன உறவு முறை?
1. கணவன் 2. தந்தை 3. மாமன்


38. வர்தா 2011ம் ஆண்டு 7வது பிறந்த தினத்தை கொண்டாடினாள் எனின் அவள் பிறந்த ஆண்டு யாது?
1. 2005 2. 2003 3. 2004

❖ **39 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக**

39. இது நான்கு எழுத்துக்களை கொண்ட சொல்லாகும். இரண்டாம் எழுத்தை நீக்கினால் பணம் ஆகும். மூன்றாம் எழுத்தை நீக்கினால் பயம் ஆகும். எனின் இந்த நான்கு எழுத்து சொல் யாது ? ....................

40. நான் யாழ்ப்பாணத்தில் உள்ள நவாலி என்னும் ஊரில் பிறந்தேன். என்னை தங்கத் தாத்தா என அழைப்பார்கள். குழந்தைகளுக்கான பல பாடல்களை பாடியுள்ளேன் நான் யார் ? ....................








## தரம் - 5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு






❖ **1ஆம், 2ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே ஒத்த இரண்டு உருக்களை குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழ் கோடிடுக.**

01.

A

B

C

D

1. B உம் D உம் 2. B உம் C உம் 3. A உம் D உம்

02.

A


B

C

D





1. A உம் D உம் 2. B உம் C உம் 3. C உம் D உம்

❖ **கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ்கோடிடுக.**

03. சர்மினாவின் தங்கை சாமிலா, ஆமினாவின் சகோதரி சர்மினா அதன்படி கூறக்கூடிய கூற்று.
1. ஆமினாவின் தங்கை சர்மினா
2. சர்மினாவின் அக்கா ஆமினா
3. சாமிலாவின் சகோதரி ஆமினா

04. நான்கில் ஒன்றை நீக்கினால் ஐந்து ஆகும். இக்கூற்று உண்மையாவது
1. எழுத்துக்களில் எழுதும் போது
2. இலக்கத்தில் எழுதும் போது
3. உரோமன் எண்குறியில் எழுதும் போது


05. கீழே தரப்பட்ட கடிகாரமுகங்களின் நேரங்களை ஒழுங்குமுறையாகக்காட்டும் விடையை தெரிக.

A 
B 
C 
D 

1. B. C. A. D 2. C. A. B. D 3. D. C. A. B

06. 3, 2, 6, 4, 9, 6 [ ] 10, 18, 12, 21, 14 எண் தொடரில் வெற்று கூட்டினுள் வரவேண்டிய எண்களை கொண்ட விடையை தெரிக.
1. 12, 8, 15 2. 8, 10, 14 3. 15, 12, 8

தராசுகளில் உள்ள உருக்களின்படி 7ஆம், 8ஆம் வினாக்களுக்கு விடை தருக.




07. ■ இவ்வுருவின் நிறை யாது? 1. 375g 2. 450g 3. 350g

08. ○ இவ்வுருவின் நிறை யாது? 1. 100g 2. 150g 3. 125g

❖ **கீழேயுள்ள விபரணத்தை வாசித்து வினாக்களுக்கு விடைதருக.**


| | | |
|---|---|---|
| 1 அப்பிள் | 2 அப்பிள் | 1 பப்பாசி |
| 1 தோடை | 2 தோடை | 1 அன்னாசி |
| 1 அன்னாசி | 1 அன்னாசி | 65.00 |
| 75.00 | 120.00 | |

09. அன்னாசி ஒன்றின் விலை யாது? 1. 30.00 2. 24.00 3. 45.00

10. பப்பாசி ஒன்றின் விலை யாது? 1. 38.00 2. 35.00 3. 32.00

11. அப்பிள் ஒன்றும் தோடைஒன்றும் வாங்கத்தேவையான பணத்தொகை யாது?
1. 40.00 2. 52.00 3. 45.00


12. சதுரமுகி செய்வதற்கான வெட்டுரு தரப்பட்டுள்ளது. இதனை மடித்து ஒட்டுவதன் மூலம் பெறப்படும் சதுரமுகியின் எதிர்ப்பக்கங்களில் உள்ள புள்ளிகளின் கூட்டுத்தொகை 7 ஆக அமையக்கூடிய உரு எது?




13. உலோகங்கள் தொடர்பாக கூறப்பட்ட கூற்றுக்களில் பிழையான கூற்று எது?
1. உலோகங்கள் வெப்பமேற்றும் போது விரிவடையும்.
2. இரசம் திரவநிலையில் உள்ள உலோகமாகும்.
3. உலோகங்களிலே அடர்த்தி கூடியது வெள்ளி ஆகும்.

14. எனது சட்டையில் மூன்று வகையான பத்து நாணயங்கள் இருந்தன. அவற்றின் மொத்தப் பெறுமதி 27ரூபா எனின் என்னிடம் இருந்த நாணயங்கள் எவை?
1. ரூபா 5 நாணயங்கள் 4, ரூபா 2 நாணயங்கள் 3, ரூபா 1 நாணயங்கள் 3
2. ரூபா 5 நாணயங்கள் 4, ரூபா 2 நாணயங்கள் 2, ரூபா 1 நாணயங்கள் 3
3. ரூபா 5 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 5, ரூபா 1 நாணயங்கள் 2

15. உருவில் உள்ள அடைப்புக்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.




16. $9 \times 0 = 9 \boxtimes 9$ இக்கோலத்திற்கு ஏற்ப ⊠ என்ற குறியீடு எதற்காக வரையப்பட்டுள்ளது.
1. கூட்டல் 2. கழித்தல் 3. வகுத்தல்



17. பாதையில் செல்லும் போது நாம் கவனிக்க வேண்டியது
1. பாதையின் இடது புறமாகச் செல்ல வேண்டும்.
2. பாதையில் வலது புறமாகச் செல்ல வேண்டும்
3. பாதையில் வரிசையாக செல்ல வேண்டும்.

18. ஆப்பிழுத்த குரங்கு போல என்ற உவமைத்தொடரின் கருத்து
1. தொடர்ந்து முயற்சிசெய்து பயனடைதல்.
2. மீளமுடியாத துன்பத்தில் சிக்கியிருத்தல்.
3. வேதனைப்பட்டு வெற்றியடைதல்.

❖ **19ஆம், 20ஆம் வினாக்களுக்கு அறிவுறுத்தலுக்கு ஏற்ப செய்றபடுக**

X உண்மையாகவும் Y உண்மையல்லாமலும் இருப்பின் Aஐ தெரிவு செய்க
X உண்மையல்லாமலும் Y உண்மையாகவும் இருப்பின் Bஐ தெரிவு செய்க
X,Y இரண்டும் உண்மையாக இருப்பின் Cஐ தெரிவு செய்க
X,Y இரண்டும் உண்மையாக அல்லாமல் இருப்பின் Dஐ தெரிவு செய்க

19. X - ஒற்றை எண்கள் யாவும் முதன்மை எண்கள்
Y - அடுத்தடுத்துள்ள இரு முக்கோண எண்களின் கூட்டுத்தொகை சதுர எண்களாகும்
1. A 2. B 3. D

20. X - மாணிக்கக்கல் துகல்களை போடும் கூடை நாம்புல
Y - ஒளி நேர்கோட்டில் பயணம் செய்கிறது.
1. A 2. B 3. C

**A+B=35 , B+C=25 , A+C=30**

21. மேலே தரப்பட்ட தகவலின்படி A இன் பெறுமானம் யாது? 1. 12 2. 15 3. 20

22. C யின் பெறுமானம் யாது? 1. 18 2. 10 3. 15

23. தரப்பட்ட திண்மவடிவங்களில் முகங்களின் எண்ணிக்கையின்படி குறைந்த முகங்களின் எண்ணிக்கை -யிலிருந்து கூடிய முகங்களின் எண்ணிக்கை வரை எழுதப்பட்ட வரிசை எது?
1. உருளை, நான்முகி, கூம்பகம், கனவுரு
2. நான்முகி, உருளை, கூம்பு, கூம்பகம்
3. கூம்பகம், நான்முகி, சதுரமுகி, கனவுரு

24. துடித்த - எரிந்து கட்டத்தில் உள்ள சொற்களுக்கு பொருத்தமான விடையை தெரிக.
1. பெயர்சொல் - வினைச்சொல் 2. இணைமொழி - அடைமொழி
3. பெயரெச்சம் - வினையெச்சம்

25. எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக ஏற்படமுடியாத விளைவு
1. பேருந்து கட்டணம் அதிகரிக்கும்
2. விவசாய விளை பொருட்களின் விலை அதிகரிக்கும்
3. ஆடம்பர பொருட்களின் விலை அதிகரிக்கும்

26. யாழ்ப்பாணத்துக்கான கப்பல் சேவை இருதினங்களாக இடம்பெறவில்லை இதற்கான காரணமாக அமையக்கூடியது.
1. கப்பல் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமை
2. எரிபொருள் விலை அதிகரித்தமை
3. காலநிலையில் சீரகேடு ஏற்பட்டமை



சிட்டிசன் டெவலப்மென் வங்கி (CDB) யின் வாணிவிழா அண்மையில் இடம்பெற்றபோது விருந்தினர்களாக கலந்து கொண்ட நல்லை ஆதீன முதல்வருக்கு CDB வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் ரீ.சுகந்தன் பொன்னாடை போர்த்தி வரவேற்பதையும் வங்கியின் விற்பனை மேம்படுத்தல் அதிகாரி இ.கார்த்திக் உரையாற்றுவதையும், மாணவிகளின் கலை நிகழ்வினையும் காணலாம். (54)

# உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சி நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு வாய்ப்பு



உள்ளூர் கித்துள் சார்ந்த உற்பத்திகள் அதிகரித்துக் காணப்படும் பகுதிகளில் கித்துள் சார்ந்த உற்பத்திகளின் கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடங்களை ஏற்பாடு செய்திருக்கும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது முயற்சி பாராட்டத்தக்கது என காலிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் பிரியதர்சன த சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை காலி நகரசபை மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானநதா தலைமையில் கித்துளின் மகிமை கணகாட்சியும் விற்பனைக் கூடங்களும் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் காலி மாவட்டத்தில் கித்துள் உற்பத்திகள் சார்ந்து ஆயிரக் கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் இவர்களது வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அமைச்சின் ஊடாக மேற்கொண்டு வரும் பணிகள் சிறப்பாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது கித்துள் சார்ந்த உற்பத்தி முயற்சியாளர்களுக்கான உபகரணங்கள் பாதுகாப்பு அங்கிகள், நவீன அடுப்புகள் மற்றும் காப்புறுதி சான்றுப்பத்திரங்கள் என்பன வழங்கப்பட்டன.

சிரேஸ்ட அமைச்சர் பியசேன கமகே காலி மாவட்ட செயலாளர் ரவீந்திர ஹோவாவிதாரண, அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி மங்கலிக்க அதிகாரி, துணைச் செயலாளர் திருமதி புஸ்பா குணவர்த்தன, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் நவாப் நஜாப்தீன் உட்படப் பல அதிகாரிகளும் கைத்தொழில் முயற்சியாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தீபாவளியை முன்னிட்டு களைகட்டும் யாழ்.நகர்

(குருநகர்)

எதிர்வரும் 2 ஆம் திகதி கொண்டாடப்பட இருக்கும் தீபாவளி திருநாளை முன்னிட்டு உடு புடவை வியாபார நடைபாதைக் கடைகள் யாழ். முற்றவெளியில் ஆரம்பமாகியுள்ளன.

அதேவேளை யாழ். நகர நிரந்தர புடைவைக்கடைகளிலும் புதியரக ஆடை அணிகள் கொண்டுவரப்பட்டு காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. மேலும் நகரின் ஏனைய வீதிகளிலும் புறநகர்ப் பகுதிகளான நல்லூர். கல்வியங்காடு, தட்டாதெரு, திருநெல்வேலி மற்றும் மானிப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய கடைகளிலும் ஆடை அணிகள் தருவிக்கப்பட்டு விற்பனை நடத்துதற்கான முஸ்தீபுகள் நடந்து வருகின்றன.

எது எப்படியாயினும் தீபாவளத் திருநாளையொட்டி பாவனை மற்றும் அலங்காரப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்களை வியாபாரிகளும் தளளுபடிகள் செய்து கையிருப்புகளை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருவதும் அறியக்கூடியதாகவுள்ளது. (68)

# சம்பத் வங்கியினால் வினாடி வினா போட்டிகள்

(யாழ். நிருபர்)

மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் சம்பத் வங்கியின் யாழ்ப்பாணக்கிளை யாழ். வலயப் பாடசாலைகளில் பயிலும் உயர் தர வகுப்பு மாணவர்களிடையே வினாடிவினாப் போட்டியை நடத்தவுள்ளது.

பொது அறிவு, விளையாட்டு, சமகால நிகழ்வுகள், சர்வதேச இலக்கியம், சினிமா, இசை மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றுடன் பொருளாதாரம் சம்பந்தமான விடயங்களும் இப்போட்டியின் கருப்பொருளாக இருக்கும்.

ஓர் அணியில் ஐந்து மாணவர்கள் பங்குபற்ற முடியும். மேலதிகமாக ஒருவர் உட்பட ஆறுபேர் கொண்ட அணியின் பெயர் விபரம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு, பொறுப்பாசிரியர் மற்றும் அதிபர் ஆகியோர் உறுதிப்படுத்திய விண்ணப்பத்தினை எதிர்வரும் ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்பாக யாழ்ப்பாணம் சம்பத் வங்கிக்கிளைக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கலாமென மேற்படி கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (10)







# அதிஷ்டலாப சீட்டிழுப்பு

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் தீபாவளி விசேட சேம அதிஷ்டலாப குலுக்கல் எதிர்வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சங்கத் தலைவர் செ.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதல் பரிசாக 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 3 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

கடந்த தீபாவளியன்று வைப்புச் செய்தவர்களுக்கு 9 வீதப்படி வட்டிப்பணம் வழங்கப்படும். புதிதாக தீபாவளி வைப்பு செய்ய விரும்புபவர்களும் வைப்புச் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# சிறப்புற நடைபெற்ற பரிசளிப்புவிழா

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாள் நிகழ்வுகளும் அதிபர் தா.கணேச பாலேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வித்தியாலய பழைய மாணவி டாக்டர் சித்திராதேவி பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவத்திரை சிவநாதன் சிறப்பு விருந்தினராகவும் ஓய்வுநிலை அதிபர் மட்டுவில் ஆ.நடராசா மற்றும் ஓய்வு நிலை அதிபர் சாந்தம்மா சுப்பிரமணியம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சைவத் திருமுறைகளும் நம்மவர் செல்நெறியும் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நிறுவுநர் நினைவுப் பேருரையாற்றினார்.

ஓய்வு நிலை ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா ஆசியுரை வழங்கினார். மாணவர் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ............................................

முகவரி :- ............................................


பிறந்த ஆண்டு :- ............................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

............................................

பெற்றோர் கையொப்பம்

# சிரியாவில் குண்டு வெடிப்பு குழந்தைகள் உட்பட 40பேர் பலி



(டமாஸ்கஸ்)

சிரியா தலைநகர் டமாஸ்கஸ் அருகேயுள்ள சுக் வாடி பராடா நகரில் நேற்று முன்தினம் நிகழ்ந்த கார் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மசூதி வழியாக சென்ற 40 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.


சிரியா அதிபர் பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக போராடி வருபவர்களின் ஆதிக்கம் நிறைந்த இந்தப்பகுதியில் உள்ள ஒசாமா பின் சைத் மசூதி வாசலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் வேளையில் ஒரு காரில் தீவிரவாதிகள் வெடிப் பொருட்களை ஏற்றிக் கொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக அந்த கார் வெடித்து சிதறியதாகவும் சிலர் கூறினர். இந்தத் தாக்குதலுக்கு அரசின் ஆதரவு பெற்ற உளவுப்படையினரே காரணம் என்று ஆசாத்தின் எதிர்ப்பாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்தத் தாக்குதலில் 7 குழந்தைகள் உள்பட 40 பேர் பலியாகினார். 20இற்கும் மேற்பட்டவர்கள் உடல்கள் சிதைந்த நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

உலகச் செய்திகள்

## தாவர இலைகளில் தங்கம் அவுஸ்ரேலியாவில் அதிசயம்



(மெல்போன்)

யூகலிப்டஸ் மரங்களின் இலைகளில் தங்கம் இருப்பதாக அஸ்ரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பூமிக்கு அடியில் தங்கப் படிவங்கள் நிறைந்த பகுதிகளில் விளையும் யூகலிப்டஸ் மரங்களின் இலைகளில் தங்கம் படிந்திருப்பதாக அஸ்ரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அஸ்ரேலியவைச் சேர்ந்த கொமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனம் வறட்சி காலங்களில் ஈரப்பதத்தை தக்க வைப்பதற்காக பூமியின் ஆழத்திலிருந்து, தங்கத்துடன் கூடிய தண்ணீரை மரங்கள் உறிஞ்சி எடுக்கின்றன என்று கண்டறிந்துள்ளது. அஸ்ரேலியாவின் தங்கப் படிவங்கள் நிறைந்த கல் கூர்லி பகுதியில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. இது பற்றி அந்த நிறுவனத்தின் விஞ்ஞானி மெல்வின் லின்டர்ன் தெரிவிக்கையில் ஒரு முடியின் அளவைப்போல் பத்தில் ஒரு பங்கு தங்கம்தான் இலைகளில் படிந்துள்ளன. 500 மரங்களிலிருந்து ஒரு சிறிய மோதிரம் செய்யும் அளவுக்குத் தங்கம் கிடைக்கும். எனினும் இந்த கண்டுபிடிப்பின் மூலம் தங்கப் படிவங்கள் கிடைக்கும் இடங்களை எளிதில் அறிந்துகொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

# அமெரிக்க பட்ஜெட்டில் கல்விக்கு முன்னுரிமை

## அதிபர் ஒபாமா அறிவிப்பு



(நியூயோர்க்)

அமெரிக்காவின் அடுத்த பட்ஜெட்டில் கல்வி வளர்ச்சி திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் ஒபாமா அறிவித்துள்ளார். தேவையற்ற வரிக்குறைப்புகள் தவிர்க்கப்பட்டு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில், கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்க திட்டமிட்டுள்ளதாக ஒபாமா தெரிவித்துள்ளார். நியூயோர்க் ப்ருக்லின் தொழில்நுட்பக் கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், இத்தகவலை தெரிவித்துள்ளார்.

மேலும் பேசிய அவர் கல்வி, அறிவியல் ஆராய்ச்சி, கட்டமைப்பு, சாலைகள், விமான நிலையங்கள் உள்ளிட்டவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார். மத்தியதர வர்கத்தினரின் வளர்ச்சி, இளைஞர்களுக்கான கூடுதல் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

கல்வி உள்ளிட்ட முக்கியத் துறைகளில் உலகின் பல நாடுகள் அமெரிக்காவை பின்தள்ளிவிட்டு முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் கூறினார். பட்ஜெட் முன்னுரிமைகள் குறித்து முடிவெடுக்க போவதாக தெரிவித்த அவர், அனைத்து துறைகளிலும் அமெரிக்கா சர்வதேச அழுத்தத்தை சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் விளக்கமளித்துள்ளார். பட்ஜெட் குறித்த விவாதம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம ஆரம்பிக்கவுள்ளது. பட்ஜெட்டில் கடன் சுமையை குறைத்தல், அரசின் செலவினங்களுக்கு கட்டுப்பாடு உள்ளிட்ட அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க குடியரசு கட்சியினர் வலியுறுத்தி வரும் நிலையில், கல்வி மற்றும் கட்டமைப்பு வசதிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்க போவதாக அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இரசாயன ஆயுத அழிப்பு நிராகரித்தது நோர்வே

இரசாயன ஆயுதங்களை ஒப்படைக்க சிரியாவுக்கு ஐ.நா. கெடு விதித்துள்ள நிலையில், அந்த ஆயுதங்களை கொண்டு வந்து நோர்வேயில் அழிக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் வேண்டுகோளை நோர்வே அரசு ஏற்க மறுத்துள்ளது. இதுகுறித்து நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் போர்கே பிராண்டா செய்தியாளர்களிடம் கூறுகையில், "சிரியாவின் இரசாயன ஆயுதங்களை அழிக்கும் அமெரிக்காவின் எண்ணத்தை நாங்கள் உணர்ந்துள்ளோம். இதுதொடர்பாக, மிகத் தீவிரமாக ஆராய்ந்தோம். இதில் பல தொழில்நுட்ப மற்றும் சட்டச் சிக்கல்கள் உள்ளன.

அதற்கு ஏற்ப வல்லுநர்கள் குழுவை அமைக்காதது மற்றும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தாத நிலையில் இரசாயன ஆயுதங்களை அழிப்பது என்பது ஆபத்தை ஏற்படுத்தும். எனவே, இதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று தெரிவித்தார்.

# பேஸ்புக் பார்க்க கட்டுப்பாடு இந்திய மாணவி தற்கொலை

மகாராஷ்டிரா மாநிலத்தில் கல்லூரி மாணவி ஒருவரை அவரது பெற்றோர் கைப்பேசி மற்றும் பேஸ்புக் பயன்படுத்திய தற்காக கண்டித்ததால் அவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிராவில் உள்ள பர்பானியைச் சேர்ந்த சுனில், தஹிவாமகள் தம்பதியினருக்கு இரண்டு மகள்கள்.

இவர்களில் 17 வயதாகும் மகள் ஐஸ்வர்யா கல்லூரியில் படித்து வந்தார். இவர் அதிக நேரம் கைப்பேசி மற்றும் பேஸ்புக் பயன்படுத்துவதை கண்டு கவலை அடைந்த அவரது பெற்றோர் இத்தகைய வலைத்தளங்களையும், கைப்பேசியையும் வைத்துக்கொண்டு நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கும் பழக்கத்தை நிறுத்தும்படி கூறியுள்ளார்கள்.




இந்நிலையில் கடந்த புதன் கிழமை இரவு ஐஸ்வர்யா பேஸ்புக்கில் நிறைய நேரம் செலவழிப்பதை கண்ட பெற்றோர் அவரை கண்டித்துள்ளனர்.

இந்நிலையில் கோபமடைந்த ஐஸ்வர்யா தன்னுடைய பெற்றோர் தன்னை இதுபோல் அடிக்கடி தடுப்பதாகவும், இத்தனை கட்டுப்பாடுகளுடன் தன்னால் இருக்கமுடியாது என்றும் பேஸ்புக் இல்லாமல் தன்னால் வாழவே முடியாது எனவும் கடிதத்தில் எழுதிவைத்துவிட்டு தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச்சம்பவத்தால் ஐஸ்வர்யாவின் குடும்பமே அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ள நிலையில் பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



ஸ்பெயினின் ஓவெய்டோ நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்க புகைப்படக் கலைஞர் அன்னே லெய்போவிட்ஜிற்கு விருதை வழங்கும் ஸ்பெயின் இளவரசர் பெலிப் மற்றும் இளவரசி லெட்டிஜியா ஆர்டிஜ்.

## புதிய சூரிய குடும்பம் கண்டுபிடிப்பு



7 கிரகங்களுடன் கூடிய புதிய சூரிய குடும்பம் ஒன்றை விண்வெளி விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். நமது சூரிய குடும்பத்தைப் போன்று சில ஒற்றுமைகளைக் கொண்டிருக்கும் இந்த சூரிய குடும்பத்தில் சிறிய கிரகங்கள் முதல் பெரிய கிரகங்கள்வரை வரிசையாக உள்ளதாகவும், முதல் 5 கிரகங்கள் மட்டுமே தெளிவாக தெரிவதாகவும், அடுத்துள்ள கிரகங்கள் தெளிவாக புலப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

## நாட்டின் கஜானாவில் கைவைக்க முடியாது

### மோடி சூளுரை

நாடாளுமன்ற தேர்தல் நெருங்கும் வேளையிலும் ஊழலுக்கு எதிராக என்ன செய்ய போகிறோம்? என்று பேச காங்கிரஸ் கட்சி மறுத்து வருகிறதென குஜராத் முதல் மந்திரி நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் ஜான்சியில் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் கருத்து வெளியிட்டார். பணவீக்கம், விலைவாசி உயர்வு, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாகவும் பதில் அளிக்காமல் அவர்கள் மௌனம் சாதிக்கின்றனர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு மக்களுக்கு பதில் அளிக்க வேண்டாமா? ஆனால், தங்களை இந்த நாட்டின் ராஜாக்களாகவும் இளவரசர்களாகவும் கருதிக் கொண்டிருப்பவர்கள் பதில் அளிக்க விரும்பவில்லை.

மக்களாகிய நீங்கள் காங்கிரஸ் கட்சிக்கு 60 ஆண்டுகள் ஆட்சி செய்யும் பொறுப்பை தந்தீர்கள். எங்களுக்கு 60 மாதங்களை தாருங்கள்.

ஒரு காலத்தில் ரயில்களில் தேநீர் விற்ற என்னை பிரதமர் பதவிக்குரிய வேட்பாளராக பா.ஜ.க. அறிவித்துள்ளது.

என்னை நீங்கள் பிரதமராக்க வேண்டாம். இந்த நாட்டின் காவல்காரனாக மட்டும் நியமித்தால் போதும். உங்கள் காவல்காரனாக டில்லியில் அமர்ந்து நாட்டின் கஜானாவில் யாரும் கைவைக்க முடியாதபடி நான் காவல் காப்பேன் என அவர் தெரிவித்தார்.

# உதவிக் கல்விப் பணிப்பாளரை இந்து சமய பாடத்திற்கு நியமிக்குக

## ஆசிரிய ஆலோசகர் சங்கம் கோரிக்கை

இலங்கையில் ஒன்பது மாகாணங்களில் ஒன்றான மத்திய மாகாணத்தில் இந்து சமயப் பாடத்திற்கு உதவிக் கல்விப்பணிப்பாளர் நியமனம் வழங்கப்பட்டிருப்பது போல், வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களுக்கும் இந்து சமய பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்.பி. ஸ்ரீந்திரன் வடமாகாணக் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

சங்கத்தின் சார்பாக பொதுச் செயலாளருடன் நிர்வாக சபை உறுப்பினரான கந்த சத்தியதாசனும் இணைந்து இக்கோரிக்கைக் கடிதத்தினை கடந்த வியாழக்கிழமை வடமாகாண கல்வியமைச்சின் செயலாளரது அலுவலகத்தில் வைத்து கல்வியமைச்சரிடம் வழங்கியுள்ளனர்.

இக்கோரிக்கைக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட கல்வியமைச்சர் மேற்படி கோரிக்கையினைப் பரிசீலிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

எனவே இந்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள வடமாகாணப் பாடசாலைகளின் இந்து சமயப் பாட அபிவிருத்தியினால் பிரதான நோக்கைக் கொண்டு இந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமனத்தினை வழங்குமாறு அக்கோரிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (06)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு; மாணவரிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்தி வருவதாக கல்லூரி அதிபர் திருமதி க.கிருஷ்ணபிள்ளை அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளைப் பாடசாலை நூலகக் குழு மாணவர்களிடையே நடத்தி வருகின்றது.

சொல்லாக்கம், ஒரு சொல்லுக்கு இருபொருள் கூறல், பழைய பத்திரிகைத் தகவல் சேகரித்தல், கதை எழுதுதல், பேச்சு, கவிதை எழுதுதல், சித்திரம் தொடர்பான தகவல் தேடல் முதலான போட்டிகளைத் தரம் ஒன்று முதல் 13 வரையான மாணவர்களிடையே நடத்தி வருகிறது. (06)

# ஆங்கிலத்தில் பெயர்ப்பலகை; சமூக ஆர்வலர்கள் கவலை

(கரணவாய்)

வடமராட்சி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பெயர்ப்பலகை தனி ஆங்கிலத் தில் பொறிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பகுதிப் பாடசாலை ஒன்றின் பெயர்ப்பலகையில் தமிழ்மொழி இல்லாமை குறித்து சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பாடசாலைக்கு அண்மையில் உள்ள உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் பெயர்ப் பலகை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். (18)

# நெடுங்கேணி சனசமூக நிலையம்; புனரமைக்குமாறு கோரிக்கை

(நெடுங்கேணி)

நெடுங்கேணி சன சமூக நிலையம் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையிலும் இது வரையும் புனர்மானம் செய்யாத நிலையில் நெடுங்கேணி பிரதான வீதியில் இக் கட்டடம் இருப்பதனால் பிரயாணிகள் இக் கட்டடத்தினை பயன்படுத்தி வருவதாக இப்பகுதி இளைஞர்கள் கவலை தெரிவித்துள்ளனர் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வந்து இதனைத் தடுத்து நிறுத்தி புனர் நிர்மானம் செய்து மீண்டும் நூல் நிலையமாக பயன் படுத்தி தருமாறு இளைஞர்களால் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)


# முதன் முறையாக நடைபெற்ற ஜெகந்நாதரின் இரத பவனி

(திருநெல்வேலி)

ஸ்ரீ ஜெகந்நாதனின் இரத பவனி நேற்றுக் காலை வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கோவிலில் இருந்து ஆரம்பமாகியது.

இலங்கை ஸ்ரீ கிருஷ்ணா பக்திக் கழகத்தினரால் யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக பவனி வந்த இவ் இரதம் நாவலர் வீதி, மணிக்கூட்டு வீதி, ஸ்ரான்லி வீதி வழியாக நல்லூர் கோவில் வீதியில் உள்ள துர்க்கா மணி மண்டபத்தைப் பிற்பகல் 1.00 மணியளவில் வந்தடைந்தது.

ஸ்ரீ ஜெகந்நாதன், ஸ்ரீ பாலராமர், ஸ்ரீ சயத்திரா சமேத ரராகத் தேரேறி வீழி வழியே வந்தபோது பல அடியார்கள் ஸ்ரீ ஜெகந்நாதரை வழிபாடு செய்து வழங்கினார். இரதத்தோடு வந்த பக்தர்கள் ஹரே ராமா ஹரே கிருஷ்ணா கோஷத்தை எழுப்பியவாறு வந்து துர்க்காமணி மண்டபத்தை அடைந்தனர். (137, பா)



# பொதுநலவாய...

...மாலை நடைபெற்றது.

கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கொமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என முடிவு செய்யப்பட்டிருப்பதாக அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த வர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளாத போதிலும், மாநாட்டுக்கு வருகை தரவுள்ள பல நாடுகளின் பிரதிநிதிகளை மாநாட்டுக்கு வெளியில் சந்தித்து இலங்கையில் இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கையொன்றும் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இறுதிப் போரின்போது இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் கொலைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்று சர்வதேச நாடுகள் பலவும் வலியுறுயுத்தி வருகின்ற நிலையில், இங்கு நடைபெறுகின்ற பொது நலவாய நாடுகளின் மாநாட்டை தாம் புறக்கணிப்பதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சித் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் முடிவெடுத்துள்ளனர்.

இக்கூட்டத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா, சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சித்தார்த்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பிரிட்டன்...

குழுவின் தலைவர் நெஸ்பி பிரபு, பிரித்தானிய துணைப் பிரதமர் நிக்களேனுக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் குறிப்பிட்டிருந்ததாக திவயின தெரிவித்துள்ளது.

எனினும் அவருக்கு எதிராக பிரித்தானியா அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வன்னியில் படை நடவடிக்கைகளில் ஈடுபட்ட 58 ஆவது படைப்பிரிவு, அடேல் பாலசிங்கம் 5 ஆயிரம் யுவதிகளுக்கு பயிற்சிகளை வழங்கியமை தொடர்பான ஆவணங்களை கைப்பற்றியதாகவும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

இதனை தவிர ஈராக்கில் 20 ஆயிரத்து 79 இரசாயன குண்டுகள் வீசப்பட்டமை சம்பந்தமா கவும் அரசாங்கம் கமரூனிடம் கேள்வி எழுப்ப திட்டமிட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரில் 70 ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்று சனல் 4 தொலைக்காட்சி சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பிலும் பிரதமர் கமரூன் இலங்கை அரசிடம் கேள்வி எழுப்ப உள்ளதாக தெரியவருகிறது.

கொல்லப்பட்டதாக கூறப்படும் இந்த 70 ஆயிரம் பேரின் உறவினர்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறு அரசாங்கம் கோரவுள்ளதாக அரசாங்கத்தின் உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பாகிஸ்தான்...

தெரிவித்துள்ளது.

பி.என்.எஸ் என்.எ.எஸ்.ஆர் மற்றும் கைபர் ஆகிய இரண்டு கப்பல்களே இலங்கைக்கு வருகை தரவுள்ளன.

பாகிஸ்தான் கடற்படை, இலங்கை கடற்படையுடன் மிகவும் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருவதாகவும், இந்த இரு கப்பல்களின் வருகை மூலம் மேலும் உறவுகள் வலுவடையும் எனவும் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

பி.என்.எஸ் என்.எ.எஸ்.ஆர் கப்பலின் கப்டனாக தாரிக் ஹுசைன் செயற்படுவதுடன், கைபரின் கப்டனாக முகமட் பைசால் செயற்படுகின்றார். பாகிஸ்தான் கடற்படையில் குறித்த இரண்டு கப்பல்களும், முக்கிய பங்காற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பிரதேச சபையின் நிதி சமமாகப் பங்கிடப்படவில்லை

(கரவெட்டி)

கரவெட்டி தெற்கு-மேற்கு பிரதேச சபையின் நிதி பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் சமமாகப் பங்கிடப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபையின் அபிவிருத்தி நிதியைப் பங்கிடும் போது சகல பிரதேசங்களையும் உள்ளடக்கியே பங்கிடப்பட வேண்டும். ஆனால் பிரதேசசபை உறுப்பினர்கள் தாங்கள் விதிக்கும் கிராமத்திற்கு மட்டுமே அபிவிருத்திப் பணியினை மேற்கொண்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மாகாண சபையினால் வழங்கப்படும் நிதி அனைத்து கிராமங்களினதும் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு பங்கிடப்பட வேண்டும் எனவும் பிரதேச சபை நிதியம் எதிர்வரும் காலத்தில் அவ்வாறே பங்கிடப்பட வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (18)

# புகையிரத பாலம் புனரமைப்பு

(கொடிகாமம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட இத்தாவில் பகுதியில் புகையிரதப் பாலம் புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்தாவில் பகுதியில் புகையிரதப் பாதை புனரமைக்கப்பட்ட போதிலும் பாலம் புனரமைப்புச் செய்யாமல் புகையிரதப் பால வேலைகள் நடைபெற்று வந்தன.

பொது அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து இப் பகுதியில் பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தாவில், முகாலை போன்ற கிராமத்தில் உள்ள மழை நீரானது இத்தாவில் சந்திக்கு தெற்குப் பக்கம் உள்ள வீரபத்திரர் குளத்திற்குச் வழிந்தோடிச் செல்வது வழமை.

எனவே புகையிரதப் பாலம் அமைப்பதனால் இப்பகுதியில் மழை நீர் தேங்கி நிற்காது எளிதில் வடிந்து ஓடக்கூடிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர். (130)

# சேதமடைந்த வீதியால் பயணிப்போர் அவதி

நெடுங்கேணி முருகன்கோயிலுக்கு அருகாமை செல்லும் இறம்பக்குள வீதி சென்ற ஆண்டு பருவப்பெயர்ச்சி மழை காரணமாக சேதமடைந்த நிலையில் உள்ளது. இவ் வீதி இதுவரைக்கும் புனர்நிர்மாணம் செய்யப்படாத நிலையில் இருப்பதனால் தற்போது வாகனப்போக்குவரத்துக்கள் இவ் வீதிக்கூடாக செல்ல முடியாமல் உள்ளமையினால் தற்போது பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்த நிலையில் இருப்பதனால். இவ் வீதியில் கிடங்கும்குழிகளுமாக காணப்படுகின்றன இதனால் ஒவ்வொருநாளும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்குகூட உயிராபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் உண்டு இதனை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு இதனை புனர்நிர்மாணம் செய்து தரும்படி அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# 900 தமிழ் பேசும்...

பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னர், சுமார் 1500 தமிழ் பேசக்கூடிய அதிகாரிகளுக்கு பொலிஸ் திணைக் களத தில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடு பின்னணியில் சர்வதேச சக்திகள்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பின்னால் சர்வதேச இயக்கங்கள் சில உள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைசசருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கையில் யுத்தம் முடிவுற்ற பின் தற்போது முஸ்லிம்கள் மத்தியில் சில பிரச்சினைகள் கட்டவிழ்த்து விடபபட்டுள்ளன.

இதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. ஆனாலும் மக்கள் மத்தியில் இவ்வாறான நெருக்கடிகளை உருவாக்குவதில் சிலர் மும்முரமாக உள்ளனர்.

எனக்குத் தெரிந்த வகையில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் இயக்கங்களுக்கு பின்னால் சில சர்வதேச சக்திகள் செயற்படுகின்றன. யுத்தம் முடிவடைந்த பின் நாட்டில் அமைதி நிலவுகின்றதை சகிக்காத சில சக்திகள் நாட்டில் மீண்டும் அமைதியின்மையை உருவாக்குவதற்கு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன.

ஹலாலுக்கு எதிராக என்று கூறி முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுகின்றனர். நாங்கள் பல நூற்றாண்டுகளாக ஒற்றுமையாக வாழ்கின்றோம். எங்கள் மத்தியில் ஏதேனும் சந்தேகங்கள் தோன்றினால் எங்களுக்குள் பேசி தீர்த்துக் கொள்ள முடியும். அதனை விட்டுவிட்டு அதிரடியாக செயற்படுவது கவலைக்குரியவிடயமாகும். இதனால் நாட்டுக்கும் நாட்டின் அரசாங்கத்திற்கும் சர்வதேச மட்டத்தில் அபகீர்த்தி ஏற்படும்.

ஜனாதிபதி இந்த நிலையை புரிந்து கொண்டு வெகுவிரைவில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றிப்புள்ளி வைபபார் என நாங்கள் நம்புகின்றோம்.ஏனென்றால் இவ்வாறான செயற்பாடுகளினால் முஸ்லிம்களது மனம் வெகுவாக நொந்துள்ளது.

கடந்த மாகாண சபை தேர்த்லின் போது இது நன்றாக பிரதிபலித்தது" என்றார்

# உயர்வடைந்து செல்கிறது பால்நிலை சமத்துவ இடைவெளி

நாட்டில் ஆண் பெண் ஆகிய இரு பாலாருக்கும் இடையிலான இடைவெளி வெகுவாக உயர்வடைந்த நிலையில் பால்நிலை சமத்துவ இடைவெளி தொடர்பான சர்வதேச பட்டியலில் இலங்கை 55ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டில் பால்நிலை சமத்துவம் குறித்த சர்வதேச பட்டியலில் 39 ஆவது இடத்தை இலங்கை வகித்து வந்தது. இந்த ஆண்டில் பால்நிலை சமத்துவ இடைவெளி மேலும் அதிகரித்து 55ஆம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. உலகப் பொருளாதாரப் பேரவையினால் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.


2010ஆம் ஆண்டில் பால்நிலை சமத்துவம் குறித்த சர்வதேச சுட்டியில் இலங்கை முதல் இருபது நிலைகளை வகித்திருந்தது பின்னர் அந்த நிலைமை மோசமடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

136 நாடுகளில் இந்த ஆய்வு மதிப்பீடு . செய்யப்பட்டுள்ளது.

ஆண் பெண் ஆகிய இரு பாலாருக்கும் இடையில் மிகக் குறைந்தளவான நாடுகள் இந்த பட்டியலில் முன்னணி வகிக்கின்றன.பொருளாதாரம், அரசியல், சுகாதாரம், கல்வி போன்ற பல் வேறு துறைகளில் ஆண் பெண் ஆகிய இரு பாலாருக்கும் கிடைக்கும் சந்தர்ப்பங்கள், வாய்ப்புக்கள் மற்றும் சாதனை களின் அடிப்படையில் பால்நிலை சமத்துவ இடைவெளி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பால்நிலை சமத்துவம் மிகச் சிறந்த முறையில் பேணப்படும் நாடுகளின் வரிசையில் பின்லாந்து, நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் முதனிலை வகிக்கின்றன.

# படை அதிகாரியின் முதுகுத் தண்டை பதம் பார்த்த மோட்டார் குண்டு



மாதுறுஓயா இராணுவ சிறப்புப் படைப்பிரிவு பயிற்சி முகாமில், பயிற்சியில் ஈடுபட்ட இராணுவ அதிகாரி ஒருவர், முதுகுத்தண்டில் வெடிக்காத மோட்டார் குண்டு ஒன்று பாய்ந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

60 மி.மீ மோட்டாரில் பயிற்சிகளை மேற்கொண்டிருந்த போது, எதிர்பாராத வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

மோட்டாரில் இருந்து ஏவப்பட்ட செல், பயிற்சி அளித்துக் கொண்டிருந்த சிறப்புப் படைப் பிரிவின் லெப். உதயகுமார என்ற அதிகாரியின் இடதுபுற தோள் பட்டைக்கு சற்று கீழாக துளைத்துச் சென்று முதுகு வழியாக வெளியேறியது.

எனினும், மோட்டார் குண்டின் பின்புற விசிறிகள் (புரொப்ளர்) முது குத்தண்டில், சிக்கிக் கொண்டன.

இதனால், வெடிக்காத மோட்டார் குண்டு முதுகுத் தண்டில் சிக்கிய நிலையில், குறித்த சிறிலங்கா படை அதிகாரி பொலன்னறுவ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதுகுத்தண்டில் இருந்து இராணுவ அதிகாரிகளின் உதவியுடன் மோட்டார் குண்டை அகற்றும் முயற்சியில் மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# பரிசளிப்பு விழா

கரணவாய் வேதாரணியேல் வர வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தனபால சிங்கம் பாலகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினராக மக்கள் வங்கியின் நெல்லியடி முகாமையாளர் திரு.திருமதி கலாவாணி குணசீலன் சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவன் செல்வரத்தினம் மயூரன் அவுஸ்ரேலியா, கரணவாய் கிழக்கு கிராம அலுவலர் சி.அசோகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (சி.18)

# மருதனார் மட பகுதியில் காலாவதியான பொருள் அழிப்பு

யாழ். மருதனார்மடம் சந்தியிலுள்ள வியாபார நிலையங்களில் காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

மருதனார்மடம் சந்தைப் பகுதியில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனையடுத்து, உடுவில் பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் உடுவில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து நேற்று முன்தினம் குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.



இதன்போது காலாவதியான மற்றும் பழுதடைந்த நிலையிலிருந்த நூடில்ஸ், பிஸ்கட், மிக்ஸர் பைக்கற்றுக்கள் உள்ளிட்ட சில பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன் உடனடியாக அவை அழிக்கப்பட்டன. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளினை மேற்கொள்ளவுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

# புகலிடம் நிராகரிக்கப்பட்ட 79 இலங்கையர் திரும்பினர்

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 79 இலங்கையர்களை அவுஸ்ரேலியா மீண்டும் நாட்டிற்கு திருப்பி அனுப்பியுள்ளது.

இதற்கமைய 2012 ஆம் ஆண்டின் ஓகஸ்ட் மாதம் முதல் அவுஸ்ரேலியாவில் புகலிடம் நிராகரிக்கப்பட்ட சுமார் 1400 பேர் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அவுஸ்ரேலிய தூதரகத்தை மேற்கோள்காட்டி அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

செல்லுபடியான விசா இல்லாதவர்களும், புகலிடக் கோரிக்கைக்கான காரணங்கள் ஊர்ஜிதம் செய்யப்படாதவர்களும் அவர்களின் சொந்த நாட்டிற்கே திருப்பி அனுப்பப்படுவார்கள் என அவுஸ்ரேலிய குடிவரவு மற்றும் குடியுரிமை திணைக்களம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்த நிலையில் கடந்த ஜுலை மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறையின் பிரகாரம் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக படகு மூலம் தமது நாட்டிற்குள் நுழைகின்றவர்களுக்கு புகலிடம் வழங்கப்பட மாட்டாது என்றும் அவுஸ்ரேலியா அறிவித்துள்ளது.

அத்தகைய புகலிடக் கோரிக்கையாளர்களை பப்புவா நியூகினியா மற்றும் நவ்று தீவகளுக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புகலிடம் கோரி படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவினுள் நுழைய முற்பட்ட சுமார் 1500 பேர் அந்த நாட்டு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது

# மதுபான மோசடியில் 250 கோடி ரூபா நட்டம்

(கொழும்பு)

பியர் மற்றும் சாராய போத்தல்களை மோசடியாக தயாரித்து சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதால் கடந்த வருடம் அரசாங்கத்திற்கு 250 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு மூன்று தடவைகள் பியர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 9 கோடியே 93 லட்சத்து 38 ஆயிரத்து 995 லீற்றர் பியர் கடந்த வருடம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

எனினும் 12 கோடியே 35 லட்சத்து 56 ஆயிரத்து 629 லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மதுவரி திணைகளம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பியருக்கு மேலதிகமாக இரண்டு கோடியே 42 லட்சத்து 17 ஆயிரத்து 634 லீற்றர் பியர் சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது

ஒரு லீற்றர் பியருக்கு அரசாங்கம் 100 ரூபாவை வரியாக அறவிடுகிறது. இதனை கணக்கிட்டு பார்க்கும் போது அரசாங்கத்திற்கு 242 கோடியே 17 லட்சத்து 63 ஆயிரத்து 400 ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் உருவாகும் புதிய கடல் நகரம்

காலி முகத்திடலுக்கு அருகில் 400 ஹெக்டேயரில் புதிதாக உருவாக்கப்பட உள்ள புதிய நகரத்தை முகாமைத்துவம் செய்வதற்காக தனியான திணைக்களம் ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

கோல்ட் பேஸ் கிறீன் என்ற பெயரில் காலிமுகத்திடலுக்கு அரு கில் இந்த நகரம் உருவாக்கப்படவுள்ளது.

புதிதாக உருவாக்கப் படவிருக்கும் புதிய நகருக்கான தனியான சட்டத்திட்டங்களை அமுல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சமுர்த்தி உத்தியோகத்தர் தாக்குதலுக்கு ஆளானார்

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி உத்தியா கத்தர மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவரும் வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவருமான எஸ் தேவராஜா என்பவரே இந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும் குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பிரதேச செயலகத்தில் இருந்து மதிய உணவிற்காக வீடு சென்றுகொண்டிருந்த சமயம் நெடுங்கெணியில் உள்ள பத்திரிகை விற்பனை நிலையத்தில் பத்திரிகையை கொள்வனவு செய்துகொண்டிருந்த போது அரசியல் ரீதியாக ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போதே சமுர்த்தி உத்தியோகத்தர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் கால்கள் பாதிக்கப்பட்டு நடப்பதற்கு சிரமத்தை எதிர்கொள்ளும் சமுர்த்தி உத்தியோகத்தர் மீதே பிரஜைகள் குழுவின் தலைவரினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை தன் மீது இருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பிரஜைகள் குழுவின் தலைவரும் வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான எஸ். தேவராஜாவினால் நெடுங்கேணி பொலிஸில முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தமது சக உத்தியோகத்தர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாக வவுனியா வடக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளதுடன் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 அக்ரோபர் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.